
# தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, வைகாசி 16 (30-5-'59). சனிக்கிழமை | இதழ் 50

## தீப்பெட்டி நீ ஒரு ஞானி

**நண்பனே! ஞானியே! நீ மறைந்துவிட்டாயாமே! உன்னை நினைத்துப் புலம்பும் நெஞ்சம் இதோ...**

மழை கொட்டட்டும்; வானத்தின் வயிறு வெடிக்கட்டும்; ஆகாயத்தின் கண்கள் பிளக்கட்டும்; எங்கும் இருள் சூழட்டும்! ஆமாம்! இருள் இல்லார்க்குத் துன்பம் கிடையாது! இங்கே துன்பம் குடைகிறது. இருள் ஏன் படியவில்லை! துன்பம் மிகுந்த உன் வாழ்வு கற்பித்த ஒளி மிகுந்த தத்துவங்களாலா? ஒளி எப்படிப் பிறக்கும்? தூய்மை என்று இந்தச் சமுதாயத்தார் கருதியதை நீ கையாளவில்லையே! உன்னை உச்சாணிக் கொப்பில் இருக்கும் அத்தனை பேரும் திட்டினரே! நீ அப்போதும் சிரித்துக்கொண்டுதான் இருந்தாய்! உனக்குத் தெரியுமோ அந்த வாய்மொழி வீரர்களின், போக்கும் வாக்கும் மாறுபட்டவை என்று? தெரியாமல் என்ன! அறிவாய். ஊர்ப் பொதுவிடத்திலே உன்னைத் திட்டித் தீர்த்த அந்தப் பெருமக்களின் வாயும் கையும் உன்னைப் பலமுறை வளைத்திருக்கின்றன. நீயே சொல்லியிருக்கிறாய்! குடைந்தெடுக்கும் சதைத் திமிருக்குப் பதில் சொல்லமுடியாத அந்த நாக்கொழுப்புக்காரர்கள் உன்னை வானத்தில் தூக்கி வைத்த நேரங்களையும் அதே விழிகளால் கண்டுதான் இருக்கிறாய்.

அழுக்கேறிய டர்க்கிடவல், சிங்கமார்க் பனியன், ஒரு நாலு முழ வேட்டி முதலியவற்றுடன் நீ நிற்பாயே சந்து முனையில் - அந்தக் காட்சியை அதற்குள் மறந்துவிட முடியுமா? மஞ்சள் படிந்த பற்கள் வெளியே தெரிய "அண்ணே! என்ன அண்ணே!" என்று அன்பொழுகக் கூப்பிடுவாயே. அந்நேரத்தில் வேட்டியைப் பட்டும்படாமலும் தூக்கிக் கட்டிக்கொண்டு, டவலை தோள்பட்டையில் மாட்டிக்கொண்டு அகண்ட இரு கையாலும் அதை இழுத்துப் பிடித்தவாறு நீ பேசும் பேச்சு தனி ரகம்தான். எங்களைக் கண்டதும் ஏன் அப்படி அன்பு பொழியப் பேசுகிறாய்? "சிங்காரிகளின் சன்னிதானம் திறக்காதா!" என்றலையும் சதைத் திமிர்காரர்களுக்குத் துதிபாடி, துதிபாடி உன் வாய் புளித்துவிட்டது பிறரிடம் எந்த அன்பை நீ எதிர்பார்க்கிறாயோ அந்த அன்பை நாங்கள் கொட்டித் தந்ததால், எங்களைக் கண்டதும் அந்த உவகை பெருக்கெடுக்கிறது இல்லையா! "இந்தப் பயலுக எல்லாம் வெறும் பீடிமட்டும் வைத்திருக்கிறானுக... அதைப் பற்ற வைத்துப் புகைக்க வேண்டுமானு, தீப்பெட்டிக்கு என்னிடமதான் வந்தாக வேண்டும். ஆமாம், இன்ப நெருப்பைக் காட்டும் தீப்பெட்டி நான்!" என்றாய் அன்றொரு நாள். அன்றிலிருந்து உன் பெயர் **தீப்பெட்டி**யானது. நீயும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டாய்; அறிவேன்.

எதிலும் பற்றற்ற-நிலையான போக்கற்று உலவினாய். ஆசையோ, அவலமோ-உடனுக்குடன் அவற்றை மறந்துவிடுகிறாய். எதிலும் ஒட்டாத இந்தப் போக்கு ஞானிகளுக்குத்தானே இருக்க முடியும் என்பர்! நான் வேறு யாரையும் ஞானியாகக் கண்டதில்லை. உன்னைத்தான் ஞானியாகக் கண்டேன் ஆமாம். தீப்பெட்டி நீ ஒரு ஞானி!

சமுதாயச் சாக்கடை! தசைக் கிடங்கு! துன்பச் சந்தை! மோசடிக் கூடாரம்! எண்ணற்ற சொற்களை இப்படி வாரியிறைத்துப் புண்ணாக்குவர் மேதாவிகள் உங்கள் உள்ளத்தை. ஆனால் அந்தச் சாக்கடையில் விழுந்து புரள அவர்களும்தான் வருகின்றனர் என்றறிந்த நீ என்ன துன்பப்பட்டிருப்பாய். இல்லை! இதுதான் சமுதாயம் என்று பாடம் கற்றுக்கொண்டிருப்பாய். இல்லாமலா சொன்னாய். "இந்த ரோமியோக்களின் விருப்பு எனக்குத் தெரியாதா, என்ன?" என்று.

ஆனாலும் உன் மனது எவ்வளவு துடித்தது? 'நாமும் மானமும் மரியாதையுமாய் இருக்க வேண்டும்; ஊரும் உறவும் நன்மை அணைக்க வேண்டும்' என்று. எவ்வளவு கொள்ளை ஆசை உனக்கு? பைத்தியக்காரன்! நீ வீட்டை விட்டு ஓடி வந்து ஆண்டுகள் 20-க்கு மேல் கழிந்துவிட்டன என்று நீயே சொல்லியிருக்கிறாய். இப்போது செல்ல நினைத்தாய். உனக்குள்ள ஒரே உறவு, மலைமேல் குடியுள்ள

— 8 ம் பக்கம் —

# இறக்கவில்லை; இருக்கிறார்கள் எம் இதயத்தே !

"சோழவளநாடு சோறுடைத்து' என்பார்கள். ஆம்! அந்தச் சோழ நாட்டுக் கருத்தட்டாங்குடிக் கிராமத்திலே பிறந்த ஒரு மூதாட்டி, திருவிடத்தின் செல்வம், பழத்தோட்டத்தின் பணக்காரி, ஏழை மாணவ மாணவிகளின் கலங்கரை விளக்கு, எளியோரின் தாய், மன நோயாளிகளின் மருத்துவ மேதை. வயது ஒன்றும் அப்படி ஆகிவிடவில்லை. 69 தான். சுமார் 3 ஆண்டுகளுக்கு மேல், ரத்தக் கொதிப்பு, இருதய நோய், நரம்புத் தளர்ச்சி ஆகியவைகளில் சிக்குண்டு படுக்கையில் படுக்கையாய் இருந்து 20-5-59 பிற்பகல் 1-45 மணிக்கு திருவிடத்தை விட்டு-திராவிட இனத்தின் கண்களைக் குளமாக்கி அந்தோ, மறைந்து விட்டார்கள், டாக்டர் எஸ். தருமாம்பாள் எனும் பெயருடையார். பெயருக்கு ஏற்ற குணம். குணத்திற்கு ஏற்ற பெயர்.

தமிழக வரலாற்று ஏடுகளிலே முல்லைக்குத் தேர் ஈந்தான் பாரி; மயிலுக்குப் போர்வை தந்தான் பேகன்; புறாவுக்குத் தன்னையே தந்தான் சிபி; ஆவின் கன்றுக்கு தன் மகனைத் தந்தான் மனுச் சோழன், என்பார்கள். ஆனால் இவைகளை 20-ம் நூற்றாண்டிலே படித்தோம்-நடந்திருக்குமா? என்ற ஐயம். இல்லை இல்லை-இதோ இத்தனையும் ஒரு தமிழ்த்தாய் நடத்திக் காட்டி இருக்கிறார்கள். அவைகளை நினைத்தால் பாரியும், பேகனும், சிபியும், மனுச் சோழனும் நம்முன் வந்து நிற்கிறார்கள்.

கணவனால் விரட்டப்பட்ட பெண்களை, அக்கணவன்மார்களிடம் வாதிட்டும் மிரட்டியும் மீண்டும் வாழச்செய்து இருக்கிறார்கள். ஒரு முல்லைக் கொடிக்குதான் தேர் ஈந்தான் பாரி-எத்தனையோ முல்லை முறுவலொத்த காரிகைகளுக்கு வாழ்வுத் தேரை அளித்தார்கள் இவ்வம்மையார்.

கணவனை இழந்த பெண்களுக்கு அவரவர் நிலைக்கு ஏற்ற தொழிற் பள்ளில் சேர்த்து ஆசிரியைகளாக, நர்ஸ்களாக, 'ஆயா' எனும் தொழில் இயற்றுபவர்களாக ஆக்கி இருக்கிறார்கள். பேகனால் ஒரு மயிலுக்கு மட்டும் போர்வை அளிக்கப்பட்டது. திருவிடத்தின் மயிலையொத்த சாயலை உடைய மடந்தையர் பலருக்கு வாழ்வுப் போர்வையை அளித்து வறுமைக் குளிரை அகற்றி இருக்கிறார்கள்.

தன் வளர்ப்பு மகன் ஒருவர் நோய் வாய் பட்டபோது-டாக்டர்கள் ரத்தம் கேட்டபோது-"இளைஞன் வாழ்ந்தால் திருவிடம் வாழும்" எனக் கருதி "இதோ ஒரு உழக்கு" எனத் தன் செங்குருதியை அளித்து-தன்னையே புறாவுக்கு ஈந்த சிபி ஆனார்கள். இப்படி ஆயிரம் ஆயிரம் வரலாறுகள் பேசலாம்.

அன்று ஔவைப் பெருமாட்டியைப் போற்ற ஒரு அதியமான் எனும் அரசன் இருந்தான். அவன் தனக்கெனக் கொணர்ந்த நெல்லிக் கனியைத் தன்னைத் தேடிவந்த ஔவைக்கு ஈந்து வான்புகழ் பெற்றான். இந்த 20-ம் நூற்றாண்டில் இவ்வம்மையாரின் வாழ்வுக்காக ஒரு துவிபாஷிச் சீமான் ஒரு சவரன் எனும் பொற்காசை இம்மூதாட்டியின் பிறந்த நாள் அன்று பாதத்தில் வைத்து வணங்கி அப்புறம் செல்ல, ஓர் இளைஞன்-நற்றமிழ்த் தொண்டன் "வறுமை" என்றான. "இதோ சவரன், வாழ்வைப் பெற முயல்க", என வாழ்த்தி அப்பொற்காசை அவனிடம் தந்தார்கள். பெண் வடிவிலே ஒரு அதியமானைக் கண்டோம் இன்று.

வேலை அற்றோர்க்கு அவர் சொல்லும் எழுத்தும் வேலை தேடித் தந்தன. தமிழ்த்திருமணங்கள் செய்து வைப்பதிலே ஒரு ஆர்வம். அதுவும் கலப்புத் திருமணங்கள் செய்து வைப்பதிலே ஒரு தனிப்பட்ட பேரின்பம் இவர்களுக்கு.

சொன்னால் நம்பமுடியாது - வரலாறு இதனைக் கண்டிராது - பிரம்ம சமாஜத்தில் மூன்றே மூன்று ரூபாயில் ஒரு கலப்புத்திருமணம் செய்வித்து-அத்தம்பதிகள் இன்று பெருஞ்செல்வராய் வாழ்கின்றனர்.


இந்தி எனும் மந்தியைத் தமிழகத்தை விட்டு விரட்ட இதோ என்னுடன் சிறைபுக இருநூறு பெண்கள்-எண்ணிக்கொள் ஆச்சாரியாரே! இவர்கள் உள்ளே சென்றால் - அதோ இரண்டாயிரம் பெண்கள் என்று ஆணவத்திற்கு அடிகொடுத்துச் சிறை புகுந்த சிங்காரத் தமிழ் மூதாட்டி டாக்டர் தருமாம்பாள்.

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் குலதெய்வம்" என்று எங்கோ ஏட்டிலே படித்தோம். இதோ இங்கே கண் எதிரிலே "திருவிடத்தின் தனியரசி எங்கள் தமிழ்க் குலதெய்வம்" எனக் கண்ணீரைக் குளமாக்கி அந்தோ! ஆயிரம் ஆயிரம் மக்கள் அலறி அழுகிறார்கள். "அம்மா! மருந்துடன் பத்தியத்திற்கும் பணம் பெற்றவர்கள் இதோ வாழ்கின்றார்கள். உன் கைச்சாத்துகொண்டு பள்ளியில் இடம்பெற்ற மாணவ மாணவிகள் அதோ இருக்கிறார்கள். இலவச உணவுடன் கல்வியும் பெறச் செய்தாயே அம்மா!" என அலறும் ஓவியப்பாவைகள் மற்றொருபுறம். "அம்மா! நீ கொடுத்த பலகையும் புத்தகமும் - நோட்டுப் புத்தகமும் இதோ இருக்கிறதே-நீ மட்டும் ஏன் மறைந்தாய்? என் அருமைப் பாட்டியே!" எனக் கலங்கும் நூற்றுக் கணக்கான பிஞ்சு முகங்கள் பிறிதொருபுறம்.


"தமிழ் மூதாட்டியே! உங்கள் உதவியால் பட்டம் பெற்ற நூற்றுக் கணக்கான இளைஞர் இன்று உயர் பதவியில் இருக்கிறாகள். அது மட்டுமா? மாற்றார் வஞ்சகத்தால் சிறு பதவியில் இருந்தோர் உயர் பதவி பெற நீ ஏறி ஏறி இறங்கிய படிகள் - உன் பாதத்தின் பெருமையை, அச்சீரடி பட்ட புண்களை, அந்தோ கதை கதையாய்ச் சொல்கின்றனவே. மனிதகுலம் வாழ, சீமான் வீட்டிலே, உயர் அதிகாரிகள் மாளிகைகளிலே நுழைந்தாய். உடலிலிருந்த நகைகளை எல்லாம் கழற்றித் தந்தாய். மேடை ஏறிப் பேசினாய். கடிதங்கள் வரைந்தாய். கூட்டங்கள் கூட்டினாய். தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பினாய். சிறை புகுந்தாய். இப்படிப் பாடுபட்டு உன் உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள் இதோ இன்று கண்ணீரும் கம்பலையுமாய் நிற்கிறார்கள்.

"பண்பால் உயர்ந்த பெருமாட்டியே! உனது கைகள் எழுதச் சக்தியற்றபோது உனது கடிதங்களை

— 11-ம் பக்கம் —



1951-ல் அம்மையாரின் மணிவிழா, சென்னை கோகலே மண்டபத்தில், திரு. வி. க. தலைமையில் நடந்தது. அம்மையாரின் கம்பீரத் தோற்றத்தைக் காண்க.



மகளிர் மன்றத் தோற்ற விழா. குழந்தையின் வீரத்தை அண்ணா, மதியழகன், சத்தியவாணிமுத்து ஆகியோருடன் காண்கிறார்.



1938-ல் இந்தி எதிர்ப்புப் பெண்கள் மாநாட்டைக் கூட்டி மாதர் ஊர்வலத்தை நடத்தினர். மூவாலூர் மூதாட்டி, பண்டித நாராயணி அம்மாள், சாமி சண்முகானந்தா ஆகியோருடன் (X குறியிடப்பட்ட) அம்மையாரைக் காண்க. தட்டிகளும் தாய்மார்களின் பாச இதழ்களும் அன்று முழங்கியது "தமிழ் வாழ்க!"; "இந்தி ஒழிக!" என்ற முழக்கந்தான்.

# மறையவில்லை; வாழ்கிறார்கள் நம் நெஞ்சத்தே !

# வெல்லட்டும் எங்கள் திராவிடம் !

## வெளிநாட்டு ஏட்டின் வாழ்த்து !

(''தமிழ்நேசன்'' எனும் மலாயா ஏட்டின் 12-3-'59 இதழில் அதன் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ரெ. ஸ்ரீநிவாசன் என்பார் எழுதிய கட்டுரையைக் கீழே தருகிறோம்.

இதனை நம்மூலம் தமிழகப் பார்வைக்கு அனுப்பியுதவியவர், கோலாலம்பூர் ஜி. சுப்பிரமணியர் ஆவார்.

ஏற்கனவே தென்றல் 25-4-59-ம் தேதி இதழில், சென்னையில் தி. மு. க. பெற்ற வெற்றியால் ஈழத்துத் தமிழர்கள் எப்படி மகிழ்ந்தனர் என்பதைக் காட்டும் கட்டுரையைக் கண்டோம். இக்கட்டுரையால் நம் வெற்றி எப்படி மலைநாட்டுத் தமிழர்களால் எதிர்பார்க்கப்பட்டது என்பதை அறியலாம்.—ஆ-ர்.

★

அடுத்த மாதம் சென்னை நகரில் கார்ப்பரேஷனுக்குத் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

சென்னை நகரை 100 தொகுதிகளாகப் பிரித்த பின்னர் இப்போதுதான் முதன் முதலாக சென்னை நகர சபைக்கு தேர்தல் நடக்கிறது

இதைப்பற்றி நமது நிருபர் அனுப்பிய தந்திச் செய்தியை வாசகர்கள் நேற்று நேசனில் படித்திருக்கலாம்.

கடந்த ஆண்டுகளில் கார்ப்பரேஷனில் காங்கிரஸ் கட்சியே மெஜாரிட்டிக் கட்சியாக இருந்து வந்தாலும் இந்த முறைதான் அதற்குப் பெரிய சவால் ஏற்பட்டுள்ளது.

அந்த சவால் அகில இந்தியக் கட்சிகள் என்று சொல்லிக்கொள்ளும் சோஷலிஸ்டு கட்சி, பிரஜா சோஷலிஸ்டு கட்சி, கம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றிடமிருந்து ஏற்படவில்லை.

ராஜ்யக் கட்சி என்றும், வகுப்புவாதக் கட்சி என்றும், பிரிவினைக் கட்சி என்றும் மாற்றுக் கட்சிகளால் கேலி செய்யப்படும் தி. மு. கழகந்தான் காங்கிரஸ் கட்சிக்குப் பெரிய சவால்விடும் தன்மையில் அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது.

60 ஆண்டுகளுக்கு மேலாக நடந்துவரும் காங்கிரஸ் கட்சி 100 தொகுதிகளுக்கும் அபேட்சகர்களை நிறுத்தியிருப்பது ஆச்சரியப்படக் கூடிய காரியமல்ல.

10 ஆண்டுகளுக்குமுன் தோன்றிய கட்சியான தி மு. கழகம் 90 தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்துவதையும், அதற்கு முன்னரே அகில இந்திய ரீதியில் இயங்கி வந்த கட்சிகள் ஒவ்வொன்றும், 20 தொகுதிகளுக்குமேல் அபேட்சகர்களை நிறுத்த முடியாமல் போய்விட்டதையும் பார்க்கும்போது தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு அடுத்தபடியாக பெரிய கட்சியாக தி மு. க. வளர்ந்துள்ளது நன்கு புலனாகும்.

ஆம்! தமிழ்நாட்டில் கம்யூனிஸ்டு கட்சி தொலைந்தால் கவலையில்லை. ஆனால் சோஷலிஸ்டு கட்சிகள் நலிந்து போவதை யாரும் விரும்ப மாட்டார்கள். எனினும் ஆவடிக் காங்கிரஸ் சோஷலிஸக் கொள்கையை ஏற்றுக்கொண்ட பின்னர் சோஷலிஸ்டுக் கட்சிகள் கடையாணி இல்லாத வண்டிகளாகிவிட்டன என்றே சொல்ல வேண்டும்.

ஆனல் ஒன்றுமட்டும் நிச்சயம். சோஷலிஸ்டு கட்சிகள் நசித்தாலும், சோஷலிஸ்டு தத்துவம் நசிக்காது.

எந்த நாட்டிலும் ஒரு அரசியல் கட்சி உயிர்ப்புடன் செயலாற்ற விரும்பினல் அவை சோஷலிஸக் கொள்கையைப் புறக்கணிக்க முடியாது.

அதனல்தான் தனி திராவிட நாடு கோரும் திராவிட முன்னேற்றக் கழகமும் சோஷலிஸக்கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஒரு சிலர் நினைப்பது போல தி மு. க. வகுப்புவாதக் கட்சி அல்ல.

அதில் தமிழ் நாட்டிலுள்ள எல்லா மதத்தினரும், ஜாதியினரும் சேரலாம்.

திராவிடர் கழகத்தைப்போல பிராமணர்களுக்குக்கூட அது தன் கதவைத் தாளிடவில்லை.

நாடு முழுதும் நூற்றுக்கணக்கான கிளைகளுடன் தி. மு. கழகம் இன்று வளர்ந்துள்ளது.

அதை இவ்வளவு நல்ல முறையில் கட்டிக்காத்த பெருமை அண்ணா நெடுஞ்செழியன் ஆகியோரைச் சாரும்.

மாற்றுக் கட்சியினர் எவ்வளவோ தூற்றியபோதும் அவர்கள் மதியை இழந்ததில்லை. பிறரை நிந்திக்கும் செயலில் இறங்கியதில்லை.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற வார்த்தைகளின் உண்மைப் பொருளை மக்களுக்கு உணர்த்தும் வகையில் கழகத்திற்கு வழிகாட்டி வருபவர் அண்ணாதுரை

தம்பிமார்கள்கூடச் சில சமயங்களில் ஆத்திரப்படுவதுண்டு, மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தூற்றும்போது.

அப்போதெல்லாம் ''எதையும் தாங்கும் இதயம் வேண்டும், தம்பி! கழகத்தின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்றால் ஆத்திரப்படக் கூடாது' என்று அறிவுரை புகன்று தம்பிமார்களின் சினத்தை ஆற்றுபவர் அவர்தான்!

தனித் திராவிட நாடு கோரிக்கை அடுக்குமா? தமிழ்நாட்டில் பச்சைத் தமிழர் காமராஜ் ஆட்சிதானே நடந்து கொண்டிருக்கிறது என்று கூறுபவர்களுமுண்டு.

''வட நாட்டிலுள்ள பல ராஜ்யங்களின் சர்க்கார்களைப் பார்க்கும்போது காமராஜ் மந்திரி சபை திறமையாகச் செயலாற்றுகிறது; சீர்திருத்தங்களையும், அபிவிருத்தித் திட்டங்களையும் அமலுக்குக்கொண்டு வந்துள்ளது!'' என்று வடநாட்டுக்குச் சென்று திரும்பிய பெரியார் ஈ. வே. ரா. சொல்லுகிறார்.

அரசியலில் ஈடுபடாத திராவிட கழகத்தின் தலைவர் பெரியார் வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ள விரும்பாவிட்டாலும், காமராஜ் மந்திரி சபை ஓரளவேனும் ஒழுங்காகச் செயல்பட்டு வருவதற்குக் காரணம் தி. மு. க வின் சட்ட சபை பிரவேசந்தான் என்பதை அவர் மனசாட்சி அறியும்.

அதுமட்டுமல்ல. தமிழ் சென்னை சர்க்காரின் ஆட்சி மொழியாக்கப் பட்டதற்கும், நிதி மந்திரி சுப்பிரமணியம் பட்ஜெட் உரையைத் தமிழில் ஆற்றுவதற்கும் தூண்டுகோலாகஇருந்தது தி. மு கழகமேயாகும்.

மாற்றுக் கட்சிகள் இதை ஒப்புக்கொள்ள மறுக்கலாம் ஆனல் மந்திரியின் பேச்சு இவ்வுண்மையை மறைமுகமாக ஒப்புக்கொள்கிறது.

சென்னை சட்டமன்றத்தில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசும்போது இரண்டொரு முறை ''ஆசைப்படுகிறேன், ஆசைப்படுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

அவருடைய பேச்சுக்கு மந்திரி சுப்பிரமணியம் பதிலளிக்கையில் ''ஆசைத்தம்பி ஆசைப்படுகிறார்'' என்று கூறினர்.

அண்ணாதுரை குறுக்கிட்டு, ''அடுக்கு மொழியை கூடாதென்று சொல்லும் நீங்கள் அடுக்குமொழியில் பேசுகிறீர்களே?'' என்று வினவியதற்கு, நீங்கள் எதிரில் இருக்கும்போது அடுக்குமொழி தானகவே வருகிறது என்றார் அமைச்சர்!

மந்திரி கிண்டல் செய்வதாக நினைத்துக் கொண்டு பேசியிருந்தாலும் இருக்கலாம் ஆனல் ஒன்று மட்டும் மறுக்கமுடியாத உண்மை.

தி. மு. கழகம் சட்ட சபையில் நுழைந்த பிறகு அங்கு நல்ல தமிழ் நர்த்தனம் செய்கிறது. நல்ல தமிழ்ப் பேசத் தெரியாதவர்கள்கூடத் தமிழ் பேசக் கற்றுக்கொண்டு சட்டமன்றத்திற்கு வருகிறார்கள்

டில்லி சர்க்காரிடம் தட்டிப் பேச மந்திரிகளுக்குத் துணிச்சல் வந்திருக்கிறது. தஞ்சையிலிருக்கும் பிற ராஜ்யங்களுக்கு நெல் ஏற்றுமதி செய்யப்படுவதை தடுக்க வேண்டுமென்று டில்லியை கேட்டு, சாதகமான பதிலை சென்னை சர்க்கார் பெற்றுள்ளதென்றால் அதற்கு காரணம் தி. மு கழகத்தைத் தவிர வேறல்ல.

''நெல் ஏற்றுமதியை தடை செய்யவில்லை என்றால், தி. மு. கழகத்தினர் அதைப்பற்றி பொது மக்களிடம் பிரசாரம் செய்வார்கள். இப்பொழுதே அவர்கள் கூட்டங்களுக்கு ஏராளமான மக்கள் போகிறார்கள்''.

— 8-ம் பக்கம் —

### தென்காசி மாநாட்டில் திரண்ட



மகளிர் அணியும்



மறவர் சேனையும்.

# தங்காலத் தமிழ்க் கவிஞர்கள்

## 1. கண்ணதாசன்

தென்னாட்டில் பொன்னேடுகள் பல உண்டு; பொன்னேட்டில் பொறிக்கப்பட்டோர் சிலர் உண்டு; அவர் தம்முள் ஒருவர் கவிஞர் கண்ணதாசன் எனில் உண்மை. அழகான உருவமும், குழலினிமைக் குரலும் பழத்தினிமைப் பாவும் நடமாடும் "தென்றலை"க் கண்டோர் தெளிவர். வாழ்வுப் பாதையில் வழுக்கல் பாறைகள் இருப்பதை உணர்ந்து வழியான கொள்கையின்பால் நடைபோடும் செம்மல், அவர். "தான் பெற்றஇன்பம் எல்லாம் இவ்வையகமும் பெறவேண்டும்" என்ற பெருங் கொள்கையின் விளக்கம், அவர். தமிழ்நாட்டில் கவியரங்கம் என்றால் தன்னேரிலாக் கவிஞர் கண்ணதாசன் தாரகையாய் ஒளிவிடுவார் என்பது உண்மை. வெற்றியும் விருதும் வாழ்வின் வழிபாடு என்று வாழா வண்மையோன்; சிந்தனையும் - சந்தமும் சேர்ந்து ஒலிக்கும் பாவாக்கும் வேந்தன்; அடக்கம்-அமைதி இரண்டும் இணைந்து நாட்டுமக்கள் நல்வாழ்விற்கு நலம் காட்டும் நாவேந்தன். நல்லோர் உள்ளமெலாம் நடமாடும் நல்லோன்; இப்படி அடுக்கடுக்காய் எடுத்துக் கூறினாலும் அவர்தம் அழகெல்லாம் ஆக்குதற்கு இயலேன். என்றாலும் என்னுய்வில் பட்ட பாட்டால் அவரைக் காண்போம்.

ஒரு மிகச் சாதாரணமான பொருளைக் கருவாகக் கொண்டு பெருங்காப்பியம் ஒன்றைப் படைக்க வல்லவன் சிறந்த கவிஞனாவான் என்பதை முதற் கட்டுரையிற் கண்டோர். ஒரு சிறப்பு மட்டும் முழுக் காப்பியத்திலும் ஊடாடல் வேண்டும்; இளங்கோடிகளின் சிலப்பதிகாரத்தில் "சிலம்பு" ஒன்று முழுக்காவியத்திலும் நிழலாடுகின்றது. கவிஞர் கண்ணதாசன் காப்பியங்கள் முழுவதிலும் தமிழ்த்தாயின் முன்னேற்றமே முதலாகக் காணப்படுகின்றமை எண்ணி எண்ணி இன்புறச் செய்கின்றது. கவிஞரின் 'மாங்கனி"யில்.

"என்ன சுகம்! ஆகா! என்ன சுகம்
—மாறு
இளமைத் தமிழ்ச் சிரிப்பில்
என்ன சுகம்!
சின்ன முகம் கோடிச் சித்திரங்கள்
—காட்டும்
தென்னமுதாம் தமிழ் இன்னமுதை
நினைத்தால்—என்ன சுகம்."

கவிஞரின் தமிழ்ப்பற்றுள்ளம் எளிதில் புலனாகின்றது. எடுத்துக்கொண்ட பொருள் எதுவானாலும் "எந்நேரமும் எந்தமிழ்த் தாயின் சிறப்பே என் சிறப்பு" என்ற தூய உள்ளம் துலங்குகின்றது.

வாழ்க்கையின் ஏடுகள் நாள் தோறும் வலிவிழந்து வாழ்வின் இறுதிக்கு வழிகாட்டி நகர்கின்றன. இந்த இடைக்காலத்தில் தான் இன்னோரன்ன சிறப்புச் செயல்களைச் செய்கின்றான் மனிதன். உயிர் உடலைவிட்டகன்ற மறுவேளைதான், அவன்தன் அளவிலாப் புகழ் அலை கடலுக்கும் அப்பால் ஒலிக்கத் தொடங்குகின்றது. நண்பர்கள் பழகும்போது அவர்தம் சிறப்புப் புலனாவதில்லை; அந்நண்பனை இழந்த காலைதான் இதயம் திறக்கின்றது. அது கவிஞன் இதயமானால் கையறு நிலையில், கதறும்; ஓவியன் இதயமானால் ஒளிகுன்றி மிளிரும்; அறிஞன் இதயமானால் அளவிலாத் துயருறும். நாட்டு நலம் தன் வீட்டு நலம் என்று வாழ்ந்த கலைவாணர் இறந்த வேளையில் கவிஞர் கலைவாணர் உறவினை—

"மனத்தினைக் குடையும் துன்பம்
மாற்றுவ தெவ்வா" றென்றான்.
"கனத்தினைத் தூக்கி இந்தக்
கடலிலே வீசும்" என்றேன்.

—என்பதில் புலனாகும்.

ஆனால் கவிஞரின் அடுத்த இரண்டு அடிகள் அவர்கள் உள்ளத்து உறவினைத் தெள்ளத்தெளியக் காட்டுகின்றன.

நினைத்ததை முடிக்கும் நெஞ்சன்
நிமிர்ந்தனன்! "தம்பீ! உள்ளிற்
கனப்பது மானம்"—என்றான்!
கலங்கினேன்! பதிலா சொல்வேன்!

மானத்திற்காக மாபெரும் துன்பச் சுமையைத் தூக்கி வாழ்வதைத் தவிர வழியில்லை என்பதைக் கலைவாணர் கூற, கவிஞர், மாற்றம் ஏதும் இறுக்க இயலா நிலையைக் "கலங்கினேன்" என்ற ஒரு சொல்லால் சொல்லாமல் கூறுதல் சிறப்பாகும்.

தேடிக்குத் தேடியலைந்தாலும் இனிக் கிடைக்காது; அன்றி நாட்டையால் நாட்டைத் தன்பால் திருப்பும் பாட்டாக ஊதும் பண்பாளனை இனிக் காணமுடியாது; குழலும் யாழும் கூடிக்குலவும் குரலினைக் கேட்க முடியாது. என்றால் அது நாதசுர மன்னர் டி. என். இராஜரத்தினத்தையே குறிக்கும். அன்னார் பிரிந்த காலை அருந்தமிழ்க் கவிஞர்,

"கையிலே இசையா, பொங்கும்
காற்றிலே இசையா, துள்ளும்
மெய்யிலே இசையா, மின்னும்
விழியிலே இசையா..."

என்று "இசைவரும் வழியறியாமல் கலங்கி நிற்பர், கேட்டோர்" என்கிறார்.

கவிஞர் தாம் பாடும் பொருளோடு ஒன்றிப் பழகி, அதன் இயல்புகளைத் தம்பாட்டின் இடையில் குறித்துக் காட்டுவதே சிறப்புக்கு ஒரு காட்டாகும்.

"தவுலுக்குக் கொஞ்ச நேரம்
தனிஆவர்த் தனங்கொ டுத்து
'கவுளி'வெற் றிலையில் நான்கைக்
கையிலே எடுத்து வாயில்
அவலெனக் குதப்பும்..."

என்ற வரிகள் கவிஞரின் ஈடுபாட்டையும், பாடப் பெறுவோரின் பழகிய இயல்பையும் காட்டுகின்றது.

கவிஞருக்குத் தமிழ்த்தாயிடம் உள்ள பற்று ஒன்றே வாழ்விற் செல்வம் என்று வாழ்பவர் என்பதை

"வெட்டமுயன் றாலும்
விழியுருட்டிப் பார்த்தாலும்
தட்டிப் பறித்தாலும்
தமிழல்லால் ஏதுமில்லை!"

என்று விளக்கமாக, நயமுடன் கூறும் நிலை கவிஞரின் பொருளாழத்தைக் காட்டுகின்றது.

சங்ககாலக் கவிஞர்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பொருளைக் கூறும்போது அதன் முழு வருணனையோ அன்றி ஒரு பகுதியின் வருணனையோ மட்டும் கூறுவதுண்டு. அதுபோல 'மாங்கனி'யில் ஓர் இடம்.

"படிக்கத்தை ஓர்புறமும்,
வெற்றிலைசேர்
பைக்கட்டை மறுபுறமும்
வைத்தாளாகிக்
கடற்பஞ்சு மயிர்க்கற்றை
ககனம் பார்க்கக்
காலத்தின் பழம்பாதை
அச்சுத் தோன்ற
நடுக்கத்தில் ஓயாத
நடனங் காண."

—ஒரு முதியவள் இயல்பு முழுமையுடன் காணப்படுகிறது கவிஞரின் இயற்கை ஈடுபாடு இவ்வரிகளால் புலனாகின்றது.

காதல் நிலையினைக் கவிஞர் கூறும் பான்மைக்குக் கவிஞரே நிகரானவர். காதல் வயப்பட்ட உள்ளம் என்னென்ன அறிவற்ற செயல்களைச் செய்யும் என்பதை, கவிஞர் ஒரு நடனப்பெண் சென்றபின் நடந்ததாகக் கூறுகிறார்.

"சித்திரத்தாள் அடிச்சுவட்டைத்
தேடிப் பார்த்தான்
தென்றல்வந்து போனதற்குச்
சுவடா உண்டு?
கைத்திறத்தால் தரைதடவிப்
பார்த்தே அன்னாள்
கால்பட்ட இடத்திலிளஞ்
சூடு கண்டான்!"

இந்நிகழ்ச்சி மூலம் கவிஞரின் இளமைத்துடிப்பின் வேகம் விளங்குகின்றது.

கவிஞரின் நாட்டுப்பற்று மிகவும் வேகமாய் வெளிப்படுகின்றது. நாட்டு விடுதலையில் தன் உயிரும் பெரிதில்லை என்பதை,

"கண்ணையும் காலையும் வெட்டியபின்
—இந்தக்
காய மிருந்தென்ன! போயென்ன!"

என்று புகல்வதிலிருந்து புலனாகின்றது.

"அங்கத்தின் அசைவுக்குள் அரசியலின் தேக்கம்" என்ற உண்மை, அறிஞர் அண்ணாவின் அடிப்படை இயல்பு என்பதைக் கவிஞர் சொற்கள் எடைபோட்டுக் காட்டுகின்றன.

"சட்ட மன்றிலும் சட்டி ஏந்துவான்
தமிழ னல்லால்இப் புவிதனில்
யாருளர்?"

என்று தமிழ்க்குடிமகனின் வறுமை நிலையைச் சட்ட மன்றத்து வரையிலும் காணலாம் என்பதால், நாட்டு நிலை கவலைக்கிடம் என்று காட்டுகிறார். இக்கவலை நீங்க முதல் பலி நான் என்கிறார் கவிஞர்.

"தனிமையில் செல்லப்
பணிப்பினும் முதலில்
சாகிறேன் நான்! பின்
தைரியம் பெறுகவே!"

இவ்வுலக மக்களுக்கு இலக்கியம், வழிகாட்டும் என்பதோடு வழி தவறியோரை விழிதிறக்கச் செய்து திருத்தும் என்பதை—

"வள்ளுவனின் குறள்மீது
விழியை நாட்டி
...................................
அள்ளுசுவை ஐம்பெரிய
காப்பி யங்கள்
அடுக்கிவரும் உவமைச்
சுவையால் என்றும்
கள்ளமனங் கூடநய
நிலையைக் காணும்!"

என்று கூறுகிறார்.

கவிஞர் கண்ணதாசன் ஒரு விடிவெள்ளி! கவி உலக வானிலே ஒளி மின்னும் ஒரே சுடர்! வாழும் கவிஞரிலே வாழ்வின் சுவையை வழங்கும் பெரும் பொருள்! எண்ணத்தால்—எழுத்தால், இலக்கியச் சிற்பி! அவர் வாழ்க!

—இராம. இராமநாதன்,
பி. ஏ. (ஆனர்ஸ்.)

அடுத்த இதழில்—

**முடியரசன்.**

விற்பனையாகிறது!
தேவையுள்ள விற்பனையாளர்கள்
தென்றலுக்கு எழுதுக!
★
திரு. மா. கி. தசரதன் எம். ஏ.
எழுதி, "திராவிட நாடு" இதழில் தொடர்கதையாக வந்த
"தணலில் தங்கம்"
வெளியீடு:
வெண்ணிலா வெளியீடு,
சி. காஞ்சிபுரம்.
★
விற்பனை உரிமை:
"தென்றல்"
சென்னை-6.
★
தனிப்பிரதி விலை ரூ. 1-50.
விற்பனையாளர்களுக்குக் கழிவு 20%

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

# எண்ணம்

மலர் 5 | 30-5-59 | இதழ் 50

## கூட்டும் ம. பொ. சி. பாட்டும்!

வால்வாயைக்கூடத் தாண்டமுடியாதவர், கங்கையைத் தாண்டக் கிளம்பி இருக்கிறார். அடுத்த வீட்டாரின் விலாசம்கூடத் தெரியாத ஆசாமி, அமெரிக்காபற்றி, ஆராய்ச்சி செய்யப் புறப்பட்டிருக்கிறார். "என்ன வேடிக்கை? யார் அந்த விந்தை மனிதர்? கீழ்ப்பாக்கத்திலும் தாங்கமுடியாது வெளியேற்றப்பட்ட ஆசாமியோ அவர்?" என்று கேட்கிறீர்களா? அப்படியொன்றும் இல்லை. சில காலத்திற்குமுன் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்டவர்தான் அவர். "பெற்ற கூலிக்குப் பிள்ளையார் அறிய வஞ்சகமில்லாமல் கத்தும்" அந்தக் குணாளர் குலவழியும் கொடிப் பெருமையும் தனித் தனி! புளியம் பழம் தோட்டோடு ஒட்டுகிறதா? இந்தத் தளபதியும் உண்மையோடு-உலக இயல்போடு ஒட்டமாட்டார். தனக்கெனத் தனி வழி வகுத்துக்கொள்வார். மனிதர்கள் நிழலுக்கு ஒதுங்கும் இடத்தில், எல்லாம் ஒதுங்குவதில்லையே! சில குட்டிச்சுவர்களைத்தானே நாடிப் போகின்றன! அதற்காக இவரை யாரோ என்று நினைத்துவிடாதீர்! இவர்தான் ம. பொ. சி. கழகத் தலைவர்! அப்படி ஒரு கழகம் இருக்கிறதா? என்று என்னைக் கேட்டுவிடாதீர்! அதன் முகவரி தெரிய வேண்டுமானால் அவருக்கே எழுதிக் கேளுங்கள். அது இன்னும் உயிரோடிருக்கிறது என்பதை உறுதிப்படுத்த, அவரும் அவ்வப்போது குரல் கிளப்புகிறார்! அந்தக் குரலும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முட்டி, பாரெங்கும் எதிரொலித்துத் திரும்புகிறதாம். வாழ்வுப் பயன்பெற இன்றே அக்குரலைக் கேளுங்கள்! இப்போது ஒரு புதுக் குரலைக் கிளப்பியிருக்கிறார். அப்பப்பா! இவ்வளவு அறிவு எப்படித்தான் பொத்துக்கொண்டு கிளம்புகிறதோ?

ஒரிசாவில், காங்கிரஸ், கண தந்திர பரிஷத்துடன் கூட்டுச் சேர்ந்து அமைச்சரவை அரிகிருஷ்ண மஹ்தாப் தலைமையில் அமைத்திருக்கிறது. மூவர் கொண்ட இவ்வமைச்சரவையில் முதலமைச்சரும் மற்றொருவரும் காங்கிரஸார். மற்றவர் பரிஷத்தைச் சார்ந்தவர். இந்தக் கூட்டு, உலகுக்கெல்லாம் தரும் படிப்பினை இதுதான்; "பதவிப் பித்தர்களும் பழைய எத்தர்களும் ஒன்று கூடியுள்ளனர். நாட்டுக்குத் தீது வருவதை - மக்களாட்சிப் பண்பு நசுக்கப்படுவதைக் காட்டுவதே இது"

இந்த உண்மையை தி. மு. கழகம் உணர்ந்து அன்றே சொன்னது. அறிஞர் அண்ணா அவர்களும் தனது கடற்கரைப் பேச்சில் இக்கூட்டைக் கண்டித்துள்ளார்கள். கழக ஏடான நம்நாடும் அக்கூட்டைக் கண்டித்துள்ளது. என்றாலும் இதை உணராத பேதை மதியர் எவரேனும் இருந்தால், என்ன செய்வது? நாட்டு நடப்பை அறிந்துகொள்ளமுடியாத இந்தக் கிணற்றுத் தவளைகளை எங்கே கொண்டு போய் விடுவது? தி. மு. கழகத்தாரின் இந்தக் கூற்றைத் தெளிந்துகொள்ளமுடியாதவர் ஏன் அகில உலக அரசியல் பிரச்னை பேசிக் குட்டையைக் குழப்ப வேண்டும்? அதுதான் தெரியவில்லை!

அரசியலில் அரிச்சுவடியைக்கூடக் கற்றுத்தேறாத சூரப்புலிகள் அகில உலகத் தத்துவம் பேசக் கிளம்பினால் அது நாட்டுக்குத்தான் நட்டம் என்று அறியாரா ம. பொ. சி? காங்கிரசில் ஏதோ இலட்சியங்கள் இருந்தது போலவும் அது இப்போது ஏதோ குழிக்குள் போய்விட்டதாகவும் மாரடிக்கிறார். காங்கிரஸ், என்று தனக்கென ஒரு இலட்சியத்தை வைத்திருந்தது? அது அவ்வப்போது காரியம் ஆவதற்காகப் பலரையும் சேர்த்திருக்கிறது தன்னுடன் என்பதை அறியாரா? 1952-ல் மாணிக்கவேலரையும் இராமசாமிப படையாச்சியையும் அணைத்துக்கொண்டதேன்? கூலிப் பிரச்சாரத்திற்காக உம்மையும் அணைத்திருக்கிறதே, பல முறை? கூடிக் குலவக் கூலி தந்து. கூவி அழைத்ததே-பலமுறை! அப்போது எங்கே போயின நும் ஆராய்ச்சித்திறன்! அப்போதெல்லாம் உம் "ஆழ்ந்தகன்ற அறிவும் சூழ்ந்து விளங்கும் பெருமையும்" எவர் வீட்டில் கிடந்தன? தி. மு. க. அன்றும் கண்டித்தது-தகாத கூட்டை! இன்றும் கண்டிக்கிறது - பதவிவேட்டைக்காரரின் பறறையும் பாசத்தையும்! ஆனால் நீர், உமது ஏட்டின் 24-5-59-ம் நாள் இதழில் "**நாளை, தமிழகத்திலும் தி. மு. கவை காங்கிரஸ் கூட்டுச் சேர்த்துக்கொள்ளலாம் அல்லவா?**" என்று கிண்டல் செய்கிறீர்! தி. மு. க., காங்கிரசுடன் சேரத் துடிப்பதாகக் கற்பனை செய்கிறீர்! வேண்டாம் இந்த வீண்போக்கு! தமிழகத்தின் அரசியல் நிகழ்ச்சிகளை வகுத்துத் தொகுத்து அறியத் தெரியாத நீர் ஏன் அகில உலகச் சிக்கல்களில் மாட்டிக்கொள்கிறீர்! குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளலாமா குமாரத்தலைவர்? கட்டபொம்மனைத் தூக்கி உமது தோள்கள் வலிக்கின்றனவென்றால், வேறு எங்காகிலும் சென்று எதையாகிலும் தூக்குவதுதானே! அதை விட்டுவிட்டு, ஏன் வீணான ஆபத்தில் மாட்டிக்கொள்கிறீர்! தங்களது நலன் கருதித்தான் இத்தனையும் எழுதலானேன்; தமிழகத்தின் அரசியல் வளர்ச்சியில் தங்கட்கும் அக்கறை இருக்குமானால், இனி மேலாகிலும் முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடாதீர்! அதாவது எம் காலுக்கும் உம் தலைக்கும் முடிச்சுப் போட்டு, எம்மை வீழ்த்த நினைக்காதீர்!

## மாயத்துறவு

மனைவிட்டுச் சுகம்விட்டு மதியை விட்டு
மடமையிலே அலைகின்றாய் துறவி; சொந்தம்
தனைவிட்டு வதைபட்டுச் செல்வாய்; செல்லும்
தரமென்ன விதமென்ன நினைத்தா யாநீ?
இணைவிட்டு இடர்பட்டு நாள்தோ றுந்தான்
இடம்விட்டு இடம்தேடிப் போவாய்; நீயும்
கணைபட்டுக் கண்பட்டுச் சாகும் மாபோல்
கதிகெட்டுத் துயர்பட்டுப் போவாய் திண்ணம்!

ஊண்விட்டு ஊர்விட்டு அனைத்தும் விட்டு
ஊர்விட்டுப் பேர்விட்டு வந்தாற் போலே
நாண்விட்டுத் தான்கெட்டுப் பேசு கின்றாய்
நலம்கெட்டுப் புலம்கெட்டுப் போவாய் நீதான்
கண்கெட்டுக் கவின்கெட்டார் மாந்தர் என்றே
கருதிட்டு நீஏய்க்கப் பார்க்கின் றாயே
பண்கெட்ட தோர்பாட்டைக் கேட்கும் நாட்டம்
பண்பட்டோர் நாட்டினிலே யாண்டும் இல்லை!

"பண்பட்டுத் திருந்திட்டோம்" என்றே எண்ணி
பாரோரை ஏமாற்றித் திரிந்தே வாழ்ந்தால்
புண்பட்டுப் போவாய்.உன் பொல்லாங் கெல்லாம்
புலன்பட்டுப் போம்நாளோ தூரத் தில்லை!
விண்விட்டு மண்வந்து நலமே செய்யும்
விறல்சொட்டும் துறவியென நடித்தே வாழும்
'வெண்பட்டுப்' பரதேசி உனைத்தான் கண்ணில்
விரல்விட்டு ஆட்டும்நாள் தூரத் தில்லை!

கைதொட்டு மெய்தொட்டுக் களிக்கும் எண்ணம்
கதிகெட்டு உன்நெஞ்சிற் பாய்ந்த தாலே
மைபட்டு எழில்கொட்டும் மாற்றார் பெண்ணை
மயல்பட்டுத் தான்தொட்டாய்; அந்தப் பெண்ணால்
வைபட்டு வளம்கெட்டு நின்றாய்; நெஞ்சில்
வடுபட்டு நிலைகெட்டாய்; விந்தைப் பெண்ணாள்
வாய்விட்டுக் கூவிட்ட குரலைக் கேட்டார்
வயல்விட்டு வருமாந்தர்; உன்னைப் 'போட்டார்.'

ஊருக்குள் நடந்திடநீ வெட்கப் பட்டே
உருமாறிச் செல்வதெனும் திட்டம் கொண்டு
பாருக்குள் துறவியென மொட்டை போட்டு
பரமனினைத் தான்துதிக்கும் பக்தன் போலே
திருநீற்றைத் 'திருமேனி' முழுதும் பூசி
தீராத துன்பமதை நெஞ்சில் வைத்துத்
திரிகின்றாய் பரதேசி உந்தன் 'கூத்துத்'
தெரியாதென் றெண்ணுகிறாய்; ஐயோ பாவம்!

"துறந்திட்டேன்" எனச்சொல்லி வெளியே வந்து
துறவுநிலை இலக்கணத்தைக் கொன்றே போட்டு
மறுவதனால் வெளிவந்த விதத்தை ஏய்த்து
மாப்பெரிய தியாகம்நீ செய்தா யென்று
உறுதியுடன் வெளிஉலகை நம்பச் செய்தே
உண்மைநிலை தனைமறைத்தே இன்பங் காணும்
பரதேசி உன்'சமர்த்து'த் தெரியா தென்று
பாராட்டிக் கொள்ளாதே உதைதான் கிட்டும்!

—தமிழ்ப்பித்தன்.

# காவிய நாயகி ஓவியம் வரைந்தாள்!

## மனதில் இன்றேல் திரையில் வருமோ?

கண்ணகியின் கற்பையும் சீதையின் வழியையும் இங்கே ஆய்ந்து காட்டுகிறார் தோழர் க. சி. இராசியண்ணன். மறுப்போர் "தென்றல்"லுக்கு எழுதலாம். —ஆ-ர்

அன்புள்ள நண்பா,

இற்றை நாள்காறும் அஞ்சல் எழுதாமலிருந்த பிழை பொறுக்க.

தங்களைப்பற்றி எண்ணும் பொழுது எனது உள்ளம் மிக்க வேதனைப் படுகின்றது. தாங்கள் மட்டும் தவறு செய்தவர்-மற்றவர்கள் தவறு செய்யாதவர்கள் என்று நான் குறிப்பிடவில்லை. ஆனால் தங்களுளத்தோடு நாட்டிலுலவும் நண்பர்கள் ஏராளம். ஒரே ஒரு கருத்தைமட்டும் தங்கட்கு நினைவு படுத்த விரும்புகிறேன் முதலில்.

மனிதன் பிறக்கிறான் - இறக்கிறான். இடைப்பட்ட நாட்கள் சில. அச்சில நாட்களில் எதைச் செய்ய வேண்டுமென்பதை மறந்து விடுகிறான். செய்யத்தகாத செயல்களை எல்லாம் செய்கிறான். இச்சமயம் ஒரு வினா எழுகிறது. என்ன அது? அறிந்து தெளிந்து தகாத செயல் செய்கிறானா? அல்லது அறியாமையால் செய்கிறானா?

அறிந்து தெளிந்தவன் தகாத செயல் செய்வதுண்டு. அறியாமல் தகாதது புரிபவனுமுண்டு. இவ்விரு நிலையினரும் நாட்டில் அன்றுமிருந்தனர்-இன்றுமிருக்கின்றனர்-இனியுமிருப்பர். ஆனால் ஒன்றை மட்டும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அறியாமற் செய்பவன் பிழை மன்னிக்கப் படுகிறது. அறிந்து செய்பவன் தவறு மன்னிக்கப்படுவதில்லை. 'அறிந்தவர்களெல்லாம் தவறு செய்யாமலும் இருப்பதில்லை. அறியாதவர்களெல்லாம் தவறு செய்வதும் இல்லை,' என்பதை ஒவ்வொருவரும் உணர்வர்.

தமிழ் மொழியின் அகத்துறைப் படியே தாங்கள் திருமணம் செய்து கொண்டீர்கள், ஒரு மங்கை நல்லாளை. அப்பொற்புடைச் செல்வியை நாதியற்றவளாக நடுத்தெருவில் விட்டு விட்டு நாரிகளின் பின் சுற்றியலைகின்றீர்கள். இது முறையா? என்று தான் கேட்கிறேன்.

என்னைவிட அறிவில் சிறந்தவர்-ஆண்டில் உயர்ந்தவர்-அனுபவத்தில் மிக்கவர்-அதோடு வாழ்க்கைத் துணைவியையுமுடையவர்- இந்நிலை பெற்ற தாங்களே இத்தாழ் நிலை ஒழுகின்-மற்றவர்கள் நிலை சொல்ல வேண்டுவதில்லை.

"நகுதற் பொருட்டன்று நட்டல்
மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

என்று வள்ளுவனை உணர்ந்த யான், தங்கள் தவறை எடுத்துக் கூறின், அத்தவறை மறைக்கச் சான்றோர் பலரைக் குறை கூறுகின்றீர்கள். எல்லாம் உணர்ந்த தங்களுக்கு இது இழுக்கே தவிர வேறொன்றுமில்லை.

"தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேறும் சிலப்பதிகாரம்-மக்களின் காப்பியம் என்று கூறுகிறாய். அம்மக்கள் காப்பியத் தலைமகனும்-தலைமகளும் குற்றமுடையவர்கள்தானே. அவர்கள் நெறிப்படி நாமும் ஏன் ஒழுகக்கூடாது? என்று எழுதியிருக்கிறாய்."-இதைப் படித்த எனக்கு ஒருபுறம் நகையும்-இன்னொரு புறம் வருத்தமும் ஏற்படுகின்றது. தங்கள் மூளை இவ்வித ஆராய்ச்சியெல்லாம் செய்கின்றதா என்று எண்ணி மகிழ்கின்றேன்.

"'சீதை கற்புடையவள் என்பதை காட்டக்கம்பன் இராவணன் என்ற கொடியவனைப் படைத்துத் தூக்கிச் செல்ல வைக்கிறான்.

திரௌபதி கற்புடையவள் என்பதை நிலைநாட்ட வில்லிபுத்தூரார் ஒரு துரியோதனனை அனுப்பித் துகிலுரியச் செய்கிறார்.

தமயந்தி தூய்மையானவள் எனபதை நிரூபிக்கப் புகழேந்தி இடையிலே ஒரு வேடனைத் தோற்றுவித்துள்ளார்.

அகலிகை ஒருமையுடையவள் என்பதை அறிவிக்கப் புராணிகர் ஒருவர் இந்திரனைப் படைத்துள்ளார்.'

மேலே காட்டிய நால்வகை நிலையுள் நீ கூறும் கண்ணகி எந்த நிலையைப் பெற்றவள்? எனவே, கண்ணகியைக் கற்புடையவள் என்று எங்ஙனம் கூறமுடியும்?" என்று மிக்குணர்ச்சியோடு எழுதியுள்ளீர்கள். தாங்கள் எழுதியுள்ள இத்தனைக்கும் ஒரே ஒரு சொல்லில் பதில் கூற என்னால் முடியும். இருப்பினும் சிறிது விளக்கமாக எழுதுவது ஏற்புடைத்தெனக் கருதுகிறேன்.

இலக்கிய - இலக்கணங்களைப் படித்துணர்ந்த தாங்கள் இப்படி எழுதியது எனக்கு வியத்தொறும் வியத்தொறும் வியப்பாகவே முடிகின்றது. தங்கள் நிலைக்கு வருந்துகிறேன்.

சீதை- தமயந்தி- திரௌபதி- அகலிகை இவர்களைத் தாங்கள் கற்புடையவர்கள் என்று கருதுகிறீர்கள். யான் அங்ஙனம் கருதவில்லை.

வால்மீகி ராமாயணத்திலே ஒரு காட்சி. வால்மீகியார் நூலென்ன? கம்பர் நூலிலுங்கூடத்தான்.

இராமாயணப் போர் நடைபெறுகிறது. இராமன் இலக்குவன்-மற்றும் அவன் படைகள் ஒருபுறம் இராவணன். அவன் படைகள் மறுபுறம். இருவர் படைகளும் மலைமலையாகப் பிணங்களைக் குவிக்கின்றன. அச்சமயம் இராமனும்-இலக்குவனும் இராவணனைக் காணுகின்றார்கள். கண்டதும் மயங்கி நிற்கின்றனர் சிறிது நேரம். பின்னர் இராமன், இலக்குவனை நோக்கி, "இவ்வீரன் இராவணனுடைய அழகைக் கண்டாயா? இவ்வழகு நம்மையே மயங்க வைத்துவிட்டதே! மற்றவர்கள் காணின் எந்நிலை எய்துவரோ?" என்று கூறுகின்றான். பிறிதோரிடத்திலும் இராவணனுடைய அழகு கடி விளக்கம் பெறுகின்றது.

அசோக வனத்திலிருந்து சீதை மீட்கப்படுகிறாள். அயோத்தியில் தன் மாமியுடன் அளவளாவும் போது, கோசலை சீதையைப் பார்த்துக் கேட்கிறாள்.

"அசோக வனத்தில் என்னென்ன இன்னல்கள் பட்டனையோ? அக்கொடியவன் நின்னை என்ன செய்தனனோ? எனக்கறியச் சொல்லுவாய் மகளே' என்றும், 'அப்பஞ்சமாபாதகனான இராவணன் எப்படியம்மா இருப்பான்' என்றும் வினவுகின்றாள்.

முதல் வினாவிற்கு வாயால் பதிலளித்த சீதை, இறுதி வினாவிற்கு ஓவியத்தில் பதிலுரைக்கின்றாள்.

அஃதாவது இராவணன் எப்படியிருப்பான் என்று கேட்ட மாத்திரத்தில். இராவணனுடைய உருவத்தை ஓவியமாக எழுதிக் காட்டுகின்றாள், இப்படித்தான் இருப்பானென்று.

இவ்விரு நிகழ்ச்சிகளையும் வைத்துக் கொண்டு நாம் நிலையான முடிவுக்கு வர முடியும்.

அழகனைக் கண்டு பெண்கள் மயங்குவதும், அழகியைக் கண்டு ஆண்கள் மயங்குவதும் இயல்பு. ஆனால் ஆணைக் கண்டு ஆண் மயங்குவதும், பெண்ணைக் கண்டு பெண் மயங்குவதும், இயற்கைக்கு மாறுபட்ட செயல்.

இயல்பையும் மாற்ற வைத்தது இராவணனுடைய அழகு உருவம். இராவணனாகிய ஆண் மகனை-இராமனும் இலக்குவனுமாகிய ஆண் பிள்ளைகள் கண்டு மயங்கும் பொழுது-பெண் பிள்ளையாகிய சீதை கண்டு ஏன் மயங்கியிருக்க முடியாது? சீதையும் எளிதில் மயங்கினாள் என்பதுதான் அடுத்த நிகழ்ச்சி.

சீதாபிராட்டி தன் மாமி கேட்ட கேள்விக்குப் பதிலிறுக்கும்போது, இராவணனை முன்னால் நிறுத்திக் கொண்டா படம் எழுதினாள்-முன்னால் நின்றிருந்தால் படம் எழுதத் தேவையில்லையே-எளிதாகச் சுட்டிக் காட்டி விடலாமே தன் மாமிக்கு. ஆனால் அவள் செய்ததென்ன? தன்னுள்ளத்தில் குடிகொண்டுள்ள-பதிந்துள்ள உருவத்தை முன்னிருத்தி அல்லவா ஓவியம் தீட்டுகின்றாள்! எனவே ஒரு பெண்ணினுடைய உள்ளத்தில், ஒரு ஆண் மகனுடைய உருவம் பதிந்துள்ளதென்றால் அதைப்பற்றி நாம் என்ன எண்ணுவது. சீதைக்கு இராவணன் மேல் காதல் உண்டாயிருந்தது என்பதைத் தவிர வேறொன்றும் கருத இடமில்லை.

இன்னும், சீதை இராவணனுடைய உருவத்தை ஓவியமாக வரைந்துகொண்டிருக்கும் பொழுது, இராமன் அங்கு வருகின்றான். இராமனைக் கண்டதும் சீதை படத்தை மறைத்து வைக்கின்றாள். சீதைக்கு இராவணன்மேல் அன்பு இல்லையெனில் அவன் படத்தைத் தாராளமாகத் தன் கணவன் இராமனுக்குக் காட்டியிருக்கலாமே? செய்தாளா? ஓவியத்தை மறைத்தல்லவா வைத்தாள். எனவே, சீதைக்கு இராவணன் மேல், முழுக்க முழுக்க அன்பு இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகின்றது. இப்போது தாங்கள் சீதையைப்பற்றி என்ன கருதுகிறீர்கள்?

ஆணையும் மயங்க வைத்த ஆணழகன் இராவணனைக் கண்டு சீதை மயங்காமல் இருந்திருக்க முடியுமா? என்பதைத் தெளிய வேண்டுகிறேன்.

ஒருவனுக்கு ஒருத்தி என்பது தென்னகப் பண்பாடு. ஆனால், ஒருத்திக்குப் பலர் என்பது ஆரியப் பண்பாடு. தாங்கள் கற்புக்கரசி என்று கருதும் திரௌபதியைக் கற்புடையாள் என இம்மியளவாவது சொல்லமுடியுமா? திரௌபதி பஞ்சபாண்டவர் ஐவருக்கும் மனைவியாக இருந்தவள். அத்துடனா? கர்ணனைக்கூடக் காதலித்தாள் என்று பாரதம் நமக்குக் காட்டுகின்றது.

"உள்ளத்தால் உள்ளலும் தீதே
பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வே மெனல்."

என்பதல்லவா தமிழனின் தனிப் பண்பு. எனவே மாசுள்ளவளைப் போற்றுவது மாற்றமுடியாத பிழையாயிற்றே? குணம் என்னும் குன்றேறி நின்ற நிறை கற்பாள் கண்ணகியைக் கற்புடையவள் தானா? என்று கேட்க நா கூசவில்லை. உங்களுக்கேன் கூசப் போகிறது. தங்களுக்கு முடை நாற்றமெல்லாம் நறு நாற்றமாகவல்லவா வீசுகிறது. எனவே தங்கள் கண்ணுக்குக் கண்ணகி அவ்வாறுதான் தோன்றுவாள்.

தாங்கள் மட்டும் இன்னும் இந்நிலையிலுள்ளீர்கள் என்று எண்ண வேண்டாம். தங்களைப் போன்ற கூட்டம் தமிழகத்தில் ஏராளமாக உண்டு. அவ்வன்பர்கள் எல்லோருக்குந்தான் கூறுகிறேன்.

"எண்ணித் துணிக கருமம்
துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

என்று.

இக்கருத்துக்களைத் தாங்கள் அறிந்து கூறுகிறீரா? அன்று அறியாது செப்புகிறீரா? என்பது ஐயத்திற்கிடமாக உளது. அறிந்துதான் கூறுகிறீர்கள் என்று உறுதியாக எண்ணுகிறேன்.

எனவே, தாங்கள் அறிந்திருந்தும் இங்ஙனம் கூறியிருப்பீர்களேயானால் திருந்தப் போவதில்லை. அறியாமல் கூறியிருப்பின் மிக்க தெளிவு பெறுவீர். யான் எழுதியதற்கும் பயன் உண்டு. மற்றவை, பின்.

இன்னணம்
அன்பு நண்பன்,
ஆ. துரை.

-க. சி. இராசியண்ணன்

# எழுந்தது படையங்கே, விழுந்தது பகை என்றே!

**ப**தினெட்டாவது நூற்ருண்டின் பிற்பகுதியிலும் 19வது நூற்ருண்டின் முற்பகுதியிலும் நடந்த தொழிற்புரட்சியினுல் (Industrial Revolution) பொருட்கள் உற்பத்தியிலே ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது. பெரிய பெரிய யந்திரங்களும் புதுமையான விஞ்ஞானக் கருவிகளும் கண்டு பிடிக்கப்பட்டு அதன்மூலம் மனிதனுக்குத் தேவையான பொருட்கள் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டன. பொருட்கள் அதிகம் உற்பத்தி பன்னப்பட்டதால் விலைவாசி குறைந்து உலகெங்கினும் பிரிட்டன் சரக்குகளுக்குக் கிராக்கி ஏற்பட்டது. பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு அதிகப் பணவசதி தேவைப்பட்டதால் பெரும் நிலப்பிரபுக்களெல்லாம் தொழிற்சாலைகளை ஏற்படுத்தித் தங்கள் வருமானத்தைப் பெருக்கிப் பெரிய பணமுதலைகள் ஆனுர்கள். தொழிற்சாலையில் கூலிக்கு வேலை செய்தவர்கள் தொழிலாளிகள் என அழைக்கப்பட்டார்கள். அன்றைய தினத்திலிருந்து முதலாளிவர்க்கத்திற்கும் தொழிலாளிவர்க்கத்திற்கும் ஏற்பட்ட போராட்டம் இன்றைய தினம்வரை நடந்துகொண்டேயிருக்கிறது. தொழிலாளிகளைக் கசக்கிப் பிழிந்து அவர்கள் ரத்தத்திலே நீச்சலடித்து வந்த முதலாளிகளுக்கு சாவுமணி அடிக்க யூதக்குடும்பத்தில் பிறந்தார் கார்ல் மார்க்ஸ். வறுமை என்னும் மங்கையின் அரவணைப்பிலே தன் வாழ்நாளில் முழுப் பகுதியையும் கழித்த கார்ல்மார்க்ஸுக்கு அவனுடைய நண்பன் எங்கல்ஸ் தன்னுல் முடிந்த அளவு உதவிபுரிந்தான். மார்க்ஸ் மாணவனுயிருக்கும் பொழுதே ஜெர்மன் அரசியல் அறிஞன் பிரடெரிக் ஹிகல் (Hegel) என்பவனின் எழுத்துக்களை ஆர்வத்தோடு படிப்பான். சில நாட்கள் பிரான்சில் இருந்துவிட்டு மீதி நாட்களில் இங்கிலாந்தில் அரசியல் பொருளாதாரப் புத்தகங்களைப் படிப்பதில் கவனம் செலுத்தினுன். தன்னுடைய உயிர்நண்பனுன எங்கல்ஸுடன் சேர்ந்து 'Communist Manifesto' என்ற நூலை முதன் முதலில் எழுதினுன். பிறகு தன்னுடைய பொருளாதாரக் கருத்துக்களை Das Capital (மூலதனம்) என்ற நூலில் விளக்கினுன். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நடைபெறுகின்ற வர்க்க போராட்டத்தில் தொழிலாளர்கள் நசுக்கப்படுவதைக் கண்டு கொதித்தெழுந்த மார்க்ஸ், ஒரு சிலருடைய சொகுசு வாழ்க்கைக்குத் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதைக் கண்டு கொதித்தெழுந்த மார்க்ஸ், பலாத்காரத்தின் மூலம் முதலாளிகளை முறியடிக்க-அவர்களை ஒழித்துக்கட்ட "உலகப் பாட்டாளிகளே, ஒன்றுசேருங்கள்!' எனக் குரல் கொடுத்தான். பாட்டாளிகளைச் சுரண்டும் முதலாளிகள் மதத்தின் போர்வையில் அதைப் பக்குவமாகச் செய்கின்றனர் என்ருன் மார்க்ஸ். 'மதம் மக்களுக்கு அபின். எனவே மதத்தையும் ஒழித்துக் கட்டுவதற்கு தயங்காதீர்' என்ருன். 'நீ கஷ்டப்படுவதற்குக் காரணம் நீ ஏழையாகப் பிறந்ததுதான். நீ ஏன் ஏழையாக பிறந்தாய்? அது உன் தலைவிதி. அதற்காக கவலைகொள்ளாதே நீ. இப்பொழுது துன்பத்தை அனுபவித்தால் இறந்த பிறகு மோட்சத்தை அடையலாம்' என்று போதித்து இந்த உலகத்தில் பாட்டாளி மக்கள் வறுமையில் உழலுவதற்கு வக்காலத்து வாங்கியது மதம். எனவே மதத்தை வைத்துத் தொழிலாளிகளைக் கசக்கிப் பிழிவது முதலாளிகளுக்கு எளிதாயிற்று. ஆகவே இப்பேர்ப்பட்ட மதம் நமக்குத் தேவையில்லை என்ருன் மார்க்ஸ். கார்ல் மார்க்ஸின் சீடன் என்று அழைக்கப்படுகிற லெனினும் இதே கருத்தைத் தான் தன்னுடைய "Socialism and Religion" என்ற புத்தகத்திலே கூறுகிருன்.

("To him who all his life works and suffers need religion teaches humility and patience in earthly life comforting him with the hope of heavenly reward. And to those who live by the toil of others, religion teaches philonthropy in earthly life, offering them very cheap justification for all their exploiting existence and selling at low-price tickets to heavenly bless. Religion is opium for the people. Religion is a sort of spiritual gun in which the slaves of capital are drown their human figures, their demands for any sort of worthy human life.") கம்யூனிஸ்ட் கட்சியின் மற்ரெரு பெரிய தூணுன ஸ்டாலின் அமெரிக்கத் தொழிற்சங்கப் பிரமுகர்களுக்கு கொடுத்த பேட்டியில் "கம்யூனிஸ்ட் கட்சி சோஷியலிசத்தின் வெற்றியை உலகில் ஏற்படுத்துவதற்காகக் கத்தோலிக்கம், புரொட்டஸ்டண்டு, மற்றும் பழைய மதங்களை எதிர்த்துப் போராடும். மதத்தைப் பொறுத்தவரையில் கம்யூனிஸ்ட் கட்சி நடுநிலைமை வகிக்காது. எல்லா மதங்களையும் எதிர்த்து மத எதிர்ப்புப் பிரசாரத்தைத் தீவிரமாகச் செய்யும்" என்று தெளிவுபடக் கூறியிருக்கிருர்.

("Communism will agitate against both Catholicism and Protestantism and against orthodoxy in order to bring about the triumph of the socialistic world outlook. The communist party cannot be neutral towards religion and it does conduct anti-religious propaganda against all and every religion.")

உலகக் கம்யூனிஸ்ட்களின் தற்போதையக் 'கடவுளான' குருஷ்சேவ் ரஷ்யாவைச் சுற்றி பார்க்கவந்த பிரெஞ்சுக்காரர்களுக்கு "கம்யூனிஸ்ட் கட்சி, அபினுகிய மதத்தின் போதையில் சிக்கி இருக்கும் ஒரு சில மக்களை மீட்பதற்குப் பாடுபடும்" என அறிவித்தார். நாங்கள் நாத்திகர்களாயிருப்பதில் பெருமை கொள்ளுகிருேம் என்றும் அறிவித்தார். ("We remain atheists and we do everything we can to liberate a certain part of the people from the opium attration of religion which still exists.")

மேற் கூறப்பட்டவைகளிலிருந்து மதத்தை எதிர்ப்பதில் மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் குருஷ்சேவ் போன்ற எல்லாக் கம்யூனிஸ்ட் தலைவர்களும் தீவிர ஆர்வம் காட்டியிருக்கின்றனர் என்றும் மதத்தை ஒழிப்பது கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு உன்னதமான கொள்கை என்றும் தெற்றென விளங்குகின்றன. இந்து மதத்தை விடப் பல மடங்கு வளர்ந்து விளங்குகின்ற ஏனைய மதங்களையே ஒழிக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படைக் கொள்கை தீட்டப்பட்டிருக்கும்பொழுது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மதத்திற்கு வக்காலத்து வாங்கி 'அடிப்படைக் கொள்கையை' மறுக்கிறது. தாங்கள் மார்க்ஸின், லெனினின் உண்மையான ஊழியர்கள் இல்லை என்பதை மக்களுக்குத் தெரிவிக்கிருர்கள்.

பதை அல்லவா எடுத்துக்காட்டுகிறது ஆயிரம் ஆயிரம் பொதுக்கூட்டங்களிலே கல்லடிக்கும் கத்தி முனைக்கும் அஞ்சாது, சொல்லடிக்கும் சூழ்ச்சி வலைக்கும் அகப்படாது, மதத்தின் பெயரால் சிலர் நடத்தும் மந்தகாசமான வாழ்வையும், சாணிச்குப் பொட்டிட்டு சாமி என்போர் செய்கையையும் நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் அறிவித்தார்; அறிவியக்கத்திற்கு அனைவரும் வாரீர் எனப் புரட்சிக்குரல் எழுப்பினுர் எங்கள் தலைவர் நாம் அறிவுக் கொள்கைகளைப் பரப்புகையில் மதத்தை ஆதரிக்கும் 'மாடர்ன் கம்யூனிஸ்ட்"கள் பிள்ளையார் சிலையைத் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு தேரோட்டம் நடத்தியதை, தமிழ்நாடே கண்டு நகைத்தது. கம்ப ராமாயணத்தில் சீதையின் அழகை கம்பன் வர்ணிக்கும் பாங்கைக் கண்டு அதை 'புரட்சி' என்றுப் கருதும் காம்ரேடுகளுக்கு-பிரெஞ்சுப் புரட்சி, சைப்ரஸ் எழுச்சி, அல்ஜீரியக் கிளர்ச்சி முதலியவை எல்லாம் எப்படித்தான் புரட்சியாகத் தென்பட்டனவோ? ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. தேவாரத்திலும் திருவாசகத்திலும் சமத்துவத்தைத் தேடிப் பார்த்துக் கொண்டிருக்கும் தோழர்கள் இன்னும் சிறிது நாளில் "கம்யூனிசத் தந்தை கார்ல்மார்க்ஸ் அல்ல. உலகிற்கு முதன் முதலில் கம்யூனிசத்தை அளித்தவன் கவிச் சக்கரவர்த்தி கம்பன்" என்று சொன்னுலும் நாமெல்லாம் ஆச்சரியப்பட மாட்டோம். சொல்லியதாகவும் அறிகிருேம்.

# ஈசனைத் தொழுதீர்! முன்னேர் போதனை மறந்தீர்!

நேராக மக்களிடையே கம்யூனிசக் கொள்கைகளை எடுத்துச்சொல்லத் தைரியமில்லாத நமது "காம்ரேடு"கள், சூழ்நிலைக்குத் தக்கவாறு வேடம் எடுக்கும் ஜீவானந்தங்கள், "மதத்தை நாங்கள் எதிர்க்கமாட்டோம். நாங்களும் சுப்ரமணிய சாமிக்கு காவடி எடுப்போம்" (26-3-59 சுப்ரமணியருக்கு விழா நடத்தினுர் திண்டுக்கல் கம்யூனிஸ்ட் மதனகோபால்) என்று நாக்கு கூசாமல் கூறுகிற மதனகோபாலர்கள், கம்யூனிஸ்ட் கட்சியின் தூண்களாகக் காட்சியளிக்கிருர்கள் என்ருல் கம்யூனிஸ்ட் கட்சி கொள்கையை அடகுவைத்து அரசியல் விபசாரியாக மாறியிருக்கிறது என்பதை

மேலே குறிப்பிட்டபடி மதத்தைப் பற்றி விளக்கவுரை-தெளிவுரை-பதவுரை அத்தனையும் எழுதியிருக்கிருர்கள் உண்மையான கம்யூனிஸ்ட் தலைவர்கள். ஆனுல் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் பீட்டர் மொருயிஸ் போன்ற தூத்துக்குடி மத ஆதரவாளர்களுக்குச் சாதகமாகப் பேசுகின்றனர். அவரை மதத்திலிருந்து நீக்கியது சரியில்லை என்று வழக்கு தொடரப்போகிருர்களாம். என்னே அறிவு! இப்பேர்ப்பட்ட சூராதிசூரர்கள்தான் இன்றையதினம் நம்மைப் பார்த்து, 'கொள்கையை விட்டுக்கொடுத்தவர்கள்' என்று கூக்குரலிடுகிருர்கள். நாம் அன்று கூறினேம் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று. இன்றும் என்றும் இதையேதான் கூறுவோம், சுரண்டலற்ற ஒரு சமுதாயத்தை உண்டாக்க மதம் உதவுகிறதா? நம்மிடையே ஒற்றுமையுள்ள ஒரு சமூக அமைப்பை, சிருஷ்டிக்க மதம் உதவுகிறதா? அப்படியானுல் அந்த மதம் நமக்குத் தேவை என்று அன்றும் கூறினேம்; இன்றும் கூறுகிருேம். ஆனுல் அப்படி ஒரு மதத்தையும் காணேம். தமிழ்நாட்டில் உள்ள அருமைக் கம்யூனிஸ்ட் நண்பர்கள், எது உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்பதைச் சிந்தித்துப் பார்த்து, அவர்கள் எவ்வாறு கம்யூனிஸ்ட் தலைவர்களால் ஏமாற்றப்படுகிருர்கள்; சுரண்டப்படுகிருர்கள் என்பதை உணருமாறு, மார்க்ஸ், லெனின், குருஷ்சேவ் ஆகியவர்கள் சார்பாகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

—ஜோசப் பெஸ்கி பி. ஏ.



தென்காசி மாநாட்டு மேடையில் தலைவர்கள் அமர்ந்திருக்க மதுரை முத்து பேசுகிருர்.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

உன் அக்காவும் அவள் மகளும்தாம். துணிகளை வாங்கினுய்; கனிகளை மூட்டை கட்டினுய்; அணிமணிகள் வாங்க உன்னிடம் பணம் இல்லை என்றாலும் இருந்ததோடு சென்ருய். துறவிபோல் அலைந்த உன் மனதில் எப்படித் திடீரென இந்தப் பாசம் ஒட்டிக்கொண்டது? எனக்கே தெரியவில்லை! போனுய்; கண்டாய்; இருந்தாய்; வந்தாய்! மறுபடியும் பழைய நிலைக்கே வந்தாய்! எல்லாம் மாயை என்ற நிலைக்கே வந்துவிட்டாயே! என்ன சூழ்ச்சி! அத்துணையும் விந்தையப்பா! மறுபடியும் மருந்துக்கடை வாசற்படியில், கட்டுப் பீடியும் தீப்பெட்டியுமாய் உட்கார்ந்துவிட்டாயே! என்ன விந்தை? எங்கே அந்தப் பாசமும் பற்றும்? பிய்க்க முடியாதபடி ஒட்டிக்கொண்டிருக்கின்றன என்றல்லவா நினைத்தேன்.

எங்கே போகிருய்? இந்தத் தொழில் பிடிக்கவில்லையா? உள்ளே மானச் சுடர் கொழுந்துவிடுகிறதா? இதென்ன சைக்கிள் ரிக்ஷா! "இனி மேல் நாளுக்கு இரண்டு ரூபாய் கிடைத்தாலும் போதும்; அது நல்ல வழியில் உடல் உழைப்பால் கிடைத்தால் சரி" என்ருய் மாடாய்ச் சுழன்ருய். உன் முகத்தில் நிறைந்திருந்த பருக்குழிகளை வியர்வைத் துளிகள் மறைத்தன. எழுத்தாளர் ஒருவர்க்கு உவமையானுய். "மனிதன் மாடாகிருன்!" என அவர் தீட்டிக் கிழித்தார். காவலர்க்கு இரையானுய். "வண்டியை நிறுத்தும் இடம் தெரியாதா?" என்று வாயைப் பெரிதாக்கினர். எப்போதோ அந்த வேலி ஒரு பருவப் பயிரை மேய முனைந்தது. நீ தடுத்தாய்! அந்த ஆத்திரம் அதற்கு. சட்டம் என்ற கொடுவாளைத் தூக்கிக்கொண்டு உன்னைச் சுற்றிச் சுற்றி அலைந்தது நீ "டபாய்த்"துப் பார்த்தாய். ஆனாலும் அந்தக் கழுகு உன்னைக் கொத்திக்கொண்டே இருந்தது. கடைசியாக, **பொதுவுடைமை போதிக்கும் அரசரடி மாளிகையில்**-புது ஜெயிலில்-ஆறுமாத வாசத்தைத் தந்துவிட்டனர். நீமுன்னே ஆண்டுகள் பலவாய் உலவிய பொதுவுடைமைப் பூங்காவிற்கும் இந்தப் பொதுவுடைமைக்கும் எத்துணை வித்தியாசம்? வாழ்க்கையைப் புளிக்க வைக்கும் சதிக்கூடம் இந்தச் சிறைக்கூடம். சே! நாம் திருந்த நினைத்தாலும் பழைய குப்பையையே கிளறச் சொல்லும் இக்கொடுமைக்குப் பெயர் சட்டமாம்! இந்தச் சட்டங்களைக் கொண்டு குப்பையில் போடு; இதைக் காக்கும் கழுகுகளை, தூக்கில் போடு! வெறுப்பு மனப்பான்மை அன்று! வேறு வழியும் காட்டாது, கடைப்பிடிக்கு வழியையும் தட்டிவிட்டால் அதற்குப் பெயர் சட்டமா என்ற கொதிப்புத்தான்.

சிறைக்கூடம் உன்னைப் புது மனிதனுக்கி விடவில்லை! என்றாலும் சிறையில் கிடந்த உன் உடலைப் பழைய மக்களுக்குக் காட்ட உனக்கே பிடிக்கவில்லை! எங்கோ ஓடினுய். தச்சர் ஒருவரிடம் வேலை பார்த்தாய். அழகான-உளுக்காத தேக்குமரம், உறுதிகொண்ட வண்ணப் பொருள்களாயின, அந்த மனிதனின் கையால். நீ வியந்தாய். உனக்குத் தெரியாது, உளுத்துப் பாழான கட்டைகளுக்கும் மெருகு கொடுத்து, அவன் ஏமாற்றுவது. புது வேலை உனக்குப் பிடித்திருந்தாலும் உன் மனப்போராட்டங்கள் அமைதியைக் குலைக்கின்றன. சிதறிய சிந்தனையும், குலைந்த கனவுகளுமாய் நீ அலைந்தாய். புதிய பணியில் உன் நாட்டம் சென்றாலும் உன் மனம் எங்கோ சுற்றியது. கிடைத்த சம்பளமும் கால் வயிற்றுக்குப் பற்ருது திண்டாடினுய்.

அப்பா-கொஞ்சம் ஓய்வு. முதலாளி வருகிற சத்தம் கேட்டது. அதற்குள் அந்தக் குவளையில் இருக்கும் தண்ணீரைக் குடித்தால் சற்றுத தெம்பு ஏற்படும் என்று கருதினுய். முதலாளியின் குவளையிலிருந்த நீரைக் குடித்தாய். ஒரு மாதிரி கரிக்கவும் அதை வைத்து விட்டு ஒதுங்கினுய். வியர்வை கொட்ட நீ வாடுவதைக் கவனியாத அவன், "சம்மட்டியை எடுத்து ரெண்டு போடு" போடச் சொன்னுன். எழுந்த உன் உடல் நிலைகொள்ளவில்லை. பெரிய மரத்துண்டை பிளக்கச் சம்மட்டியை எடுத்துப் போடச் சொன்னுன். நீ கொட்டாப்புளியை எடுத்துக்கொண்டு நின்ருய்! என்ன செய்தாய்? அப்பனே! உன் நினைவு எங்கே? உன் கையிலிருப்பது சம்மட்டியல்ல; கொட்டாப்புளி. நீ உணர்வதற்குள் அவன் உணர்ந்துவிட்டான், நீ குவளைத் தண்ணீரைக் குடித்துவிட்டதை. உன் கால்கள் தள்ளாடுகின்றனவே. "இனி நீ இங்கிருக்கத் தகுதியில்லை! நான் வைத்திருந்ததை ஏன் எடுத்துக் குடித்தாய்?" என்று உன்னை விரட்டினுன். வெளியே போ என்ருன், முதலாளி வைத்த நீரை தொழிலாளி எடுத்துக் குடித்தல் தவரு? உன் துணிமணிகளைக்கூடப் பொறுக்கிக் கொள்ளத் தெரியாது, திண்டாடி நீ வெளியில் வந்தாய். எங்கே சென்ருய்... ஆமாம்...இது உன் பழைய இடம்.

இப்போதுதான் "டாக்டர்" சொன்னுர்..."அப்பாவி...நீ ஏண்டா டிஞ்சரைக் குடித்தாய்? உன் உடம்பு பொறுக்குமா? தொண்ணூறு சதவீதம் ஆல்கஹால் ஆயிற்றே! உன் உடம்பு தாங்காதே!" என்ருர்... உன் காது அவற்றைத் அறியக் கூடிய நிலையிலா இருந்தது. இல்லை... இல்லை..."தண்ணீர்! தண்ணீர்!" என்ருய்...சொற்கள் வெளிவரவில்லை. தோற்றம்தான் காட்டியது... தண்ணீர் எங்கிருந்து கிடைக்கும் இந்த நள்ளிரவில்...ஆயிரம் பேர் ஆசையைத் தீர்த்துக்கொள்ள வழி காட்டிய நீ, தண்ணீர்மீது ஆசைப் படுகிருய். 'இரு...பக்கத்து விட்டைத் தட்டிப் பார்க்கிறேன்" என்று சென்ருர் டாக்டர்.

கதவைத் தட்டிநீர் வாங்கி வருவதற்குள் உன்நினைவு எங்கே போயிற்று... 'தீப்பெட்டி... இதோ... தண்ணீர்......" பேசவே இல்லை நீ ...திடுக்கிட்டு டாக்டர் உன் உடலைத் தொட்டார். அங்கே அடைபட்டுக் கிடந்த காற்று, விடுதலை முரசறைந்து கொண்டு ஓடிவிட்டது. ஓடியேவிட்டது இனி இந்த உடல் தண்ணீர் கேட்காது...சோறு கேட்காது.. அத்தோடு தன் மானத்தையும் பாராது...

வானம் பொத்துக்கொண்டது. அவன் அலறியபோது ஒரு சொட்டு நீர் வழங்காத வானம் இப்போது இவ்வளவு கண்ணீரை வடித்து என்ன பயன்? அவன் உன்னிடம் ஒளி கேட்டான்......மறுத்தாய்...... இப்போது மின்னுகிருய்......என்ன பயன்? அவன் உன்னை ஏவினுன், தீயோரை மாய்க்க, கல்லாய் இருந்தாய்; இப்போது கொட்டி முழக்கி என்ன பயன்? ஒன்றுமே இல்லை... எதுவுமே இல்லை...இனி அவனுக்கிரங்க யாருமே இல்லை...யாருமே வேண்டாம்...அதோ, அந்த மனிதப் புழுவை - ஆசைகள் சிதைந்த கூட்டை-உணர்ச்சிகளுக்கு அடிமையான செல்லரித்த ஏட்டை மழை அணைத்துச் செல்கிறது...இப்போது **ஏன் கண்ணீர் வடிக்கிறீர்! கண்ணீர் வடிக்காதீர்! அவன் வாழ்க்கைக்காகப் போராடிய அன்று கண்ணீர் வடிக்காத நீங்கள் ஏன். இன்று போலிக் கண்ணீர் வடிக்கின்றீர்கள்? இதயம் ஒட்டாத பிலாக்கணம், போலி பெருமூச்சு, நாடக வசன அவலம் வேண்டவே வேண்டவே வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!**

**நண்பா! நான் எங்கிருந்தாலும் உன்னை நினைத்துக்கொண்டேன். நீயும் எங்கிருந்தாலும் என்னை நினைத்துக்கோள், நீ எங்கிருக்கிருய்? ஆம், என் நெஞ்சில் நிற்கிருய்! நினைத்து ஆடுகிருய்! பாடம் பல கற்றுத் தந்தவனே, கோடி கோடி வணக்கம், உனக்கு!**

**மா. பாண்டியன்**

★ ★ ★

—3-ம் பக்கத் தொடர்ச்சி—

"நாட்டில் அதன் செல்வாக்கு வளர்ந்து வருகிறது. நகர சபைத் தேர்தல்கள் நெருங்கிக்கொண்டிருப்பதால் இதற்கு ஏதாவது செய்ய வேண்டும்"

இப்படித்தான் மந்திரி சுப்ரமணியம் மத்திய சர்க்காரிடம் சொல்லி காரியத்தைச் சாதித்திருக்க வேண்டும்.

இதில் ஒன்றும் புதுமையில்லை. ஒரு நல்ல வலுவுள்ள எதிர்க் கட்சி இருப்பதன் விளைவு இது.

அதனுல்தான் ஜனநாயகம் சிறந்த முறையில் செயல்பட நல்ல எதிர்க் கட்சி தேவை என்கிருர்கள் அறிஞர்கள்.

ஆனுல் பெரியார் சொல்கிருர், வரப்போகும் நகர சபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி நிறுத்தும் அபேட்சகர்களுக்கு வோட்டுப் போடுங்கள் என்று.

நகர சபைகளில் அரசியலுக்கு இடமில்லை. கட்சிப் பூசல்களுக்கு இடமில்லை நகர மக்களுக்கு வேண்டிய வசதிகளை, கட்சிப் பற்றின்றி செய்வதுதான் நகராட்சி மன்ற உறுப்பினர்களின் வேலை.

எந்தக் கட்சியினர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் மக்களின் தேவைகளை புறக்கணித்து விட்டுக் கொலு பொம்மைகளாய் வீற்றிருக்க முடியாது.

இதில் கட்சிப் போட்டிகள் எதற்கு எனக் கேட்கலாம்.

மக்களுக்கு சேவை செய்வதிலும், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து தருவதிலும் போட்டியிருக்க வேண்டியது அவசியமென்றே சொல்வோம்.

ஒரே கட்சியினரின் ஆதிக்கம் எந்த ஸ்தாபனத்திலும் இருக்கக் கூடாது. எதிர்த்துப் பேச ஆளில்லாத ஸ்தாபனம் மந்தமாகிவிடுவது இயல்பு.

அந்த முறையில் இதுவரையில் நகர சபையில் ஆதிக்கம் செலுத்திய காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பெரிய சவாலாக தி மு. கழகம் போட்டியிடுவதை சென்னை வாசிகள் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

★

## அடுத்த இதழில்—

திபேத் புரட்சியையும் அதன் விளைவுகளையும் விரிவாக விளக்கும் கட்டுரை ஒன்றும்,

ம. பொ. சி. கழகத்தார்க்கு மறுப்புக் கட்டுரை ஒன்றும் வெளியாகின்றன.

## டாக்டர் எஸ். தருமாம்பாள் பெண்கள் இலக்கிய வகுப்பு

★

மேற்படி பெண்கள் இலக்கிய வகுப்பு சென்னை நக்கீரர் கழகச் சார்பில் 20-6-59 பிற்பகல் 4 மணிக்கு பெத்துநாயக்கன் பேட்டையில் பேராசிரியை பண்டிதை எஸ். கிருஷ்ணவேணி அம்மையார் தலைமையில் டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., அவர்களால் திறந்து வைக்கப்படும் அலமேலு அப்பாதுரை எம். சி அவர்கள் டாக்டர் தருமாம்பாள் படத்தைத் திறந்துவைப்பார். தமிழ் ஆசிரியை பலர் கலந்துகொள்வர்.

# முசோரி பாடும் முகாரி !

அண்மையிலே தன் 'ஞாயிறு மலரில்' இந்துப் பத்திரிகை சிந்தனையைக் கிளப்பும் விதத்தில் ஒரு படத்தை வெளியிட்டிருந்தது. முசோரியில் தலாய்லாமா தங்கியிருக்கிறார் அல்லவா? அவரைப் பேட்டி காணச் சென்ற ஒரு ஜப்பானிய நிருபர் ஒரு வண்டியில் தன் இருப்பிடம் நோக்கிப் பயணம் போகிறார். வண்டி மிகப் பழைய காலத்திய வண்டி. முன்னே இரண்டு பேர் இழுக்கிறார்கள்; பின்னே ஒருவர் தள்ளுகிறார். நடுவில் ஜப்பானிய நிருபர் அமர்ந்திருக்கிறார். அவரது மடிமீது ஒரு சிறிய தட்டெழுத்து இயந்திரம் (டைப்-ரைட்டர்) இருக்க அதில் அவர் பேட்டி கண்ட விவரங்களை டைப் அடித்துக்கொண்டிருக்கிறார். . இயந்திரம் மிகச் சிறிய இயந்திரமாகும். கண்ணுக்குக்கூடத் தெரியவில்லை. அவர் டைப் அடித்துக் கொண்டிருக்கிறார் என்று படத்திற்குக் கீழே விளக்கம் கொடுத்திருந்ததால்தான் இயந்திரம் இருக்கிறது போலும், அது எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடிக்க நேரிட்டது. இத்தகைய இயந்திரங்களை யாரும் எளிதில் தூக்கிக் கொண்டு போகும் நிலைமையில் அவை மிக இலேசாகத் தயாரிக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் Portable Type-writers என்று சொல்லுவார்கள். இத்தகைய இயந்திரம் ஒன்றில்தான் தன்னுடைய பத்திரிகைக்கு அனுப்ப வேண்டிய செய்தியை 'டைப்' அடித்துக்கொண்டிருந்தார் நிருபர்.

முசோரியிலிருந்து தன்னுடைய தலைமைக் காரியாலயத்திற்கு நேரடியான தந்தி, தபால் போக்குவரத்து இல்லாத காரணத்தால், நிருபர் தாம் அனுப்ப வேண்டிய செய்தியை 'டைப்' அடித்து, வேறு இடத்திற்கு அதைத் தபால் மூலம் தான் தலைமை அலுவலகத்திற்கு அனுப்புவார். இதில் நான் குறிப்பிட விரும்புவது நாம் போக்குவரவு வசதிகளில் எவ்வளவு தூரம் பின் தங்கியிருக்கிறோம் என்பதே. அதே நேரத்தில் பிறநாடுகள்-குறிப்பாக ஜப்பான் நாடு-எவ்வளவு தூரம் போக்கு வரவு வசதியில் மட்டுமல்ல, மற்ற எல்லாத் துறைகளிலும் எந்த அளவிற்கு முன்னேறி உள்ளன என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். மடியிலே வைத்து லாவகமாக டைப் அடித்துக் கொண்டிருக்கிறார் நிருபர் என்றால், அவர் ஏறிச்செல்லும் வண்டி எவ்வளவு மெதுவாகச் செல்லும் என்பதையும் நண்பர்கள் கற்பனை செய்து பார்க்க வேண்டுகிறேன். ஒரு வெளிநாட்டு நிருபருக்கு—ஏன்? தலாய்லாமா வந்திருப்பதால் பல வெளி நாட்டு நிருபர்களுக்கும் எவ்வளவு போக்குவரவு வசதிகளை நம் அரசாங்கம் செய்து தந்திருக்க வேண்டும்? நிற்க.

மேல் நாடுகளின் அபரிமிதமான விஞ்ஞான வளர்ச்சியைக் காணும் போது, நாம் போடுகின்ற இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுகளின் வெற்றியில்தான் நாம் எப்போது ஜப்பானைப்போல் ஆகமுடியும் என்ற ஐயம் எழுகிறது. 1959-ல் நாம் போடுகின்ற திட்டத்தின் வெற்றியைக் கொண்டு 1958-ம் ஆண்டு ஜப்பானின் நிலைமையை அடையப் போகிறோம். இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முடிவது 1961-ல். அப்போது நாம் 1958-ம் ஆண்டு ஜப்பானின் பொருளாதார வளர்ச்சியைப் பெறக்கூடும். 1961-ம் ஆண்டு ஜப்பான் எப்படி இருக்கும்? அந்த ஜப்பானின் நிலைமையை நாம் எப்போது அடைவது? 'சாட்சாத்' மொரார்ஜி பாய்க்குத்தான் அது வெளிச்சம்! குல்ஸாரிலால் நந்தாவுக்குத்தான் வெளிச்சம்!!

அண்மையிலே 'இந்து' பத்திரிகை ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தது, ஜப்பானைப்பற்றி அதிலே குறிப்பிட்டிருந்தது. ஜப்பானில் சுமார் 14 மில்லியன் குடும்பங்களில் வானொலிப் பெட்டிகள் இருப்பதாகவும், இது 75 சதவிகிதம் என்றும் தெரிகிறது. நமது புண்ணிய பூமியாகிய 'பாரத வர்ஷத்தில்' எத்தனை வீடுகளில் வானொலிப் பெட்டிகள் இருக்கின்றன? வானொலி இங்கே ஓர் ஆடம்பரமான, பணக்காரர்களுக்கே உரித்தான, ஏழைகளால் எண்ணியும் பார்க்கமுடியாத பொருளாகக் கருதப்படுகிறது, 1959-ல்! ஜப்பானைப்போல்-அதாவது 75 சத விகிதம் மக்களும் வானொலிப் பெட்டி வைத்திருக்கும் நிலைமையை எத்தனையாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் பெறுவோம்? அது சாட்சாத் கேஸ்கருக்கே வெளிச்சம்!

அதே கட்டுரையில் மேலும் கண்டேன், ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவில் மட்டும் ஆறு டெலிவிஷன் நிலையங்கள் இருப்பதாக. நிச்சயமாக இந்த நிலைமையைப் பற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை. ரேடியோவே என்ன விலை வீசை என்று கேட்கும் இந்த நாட்டில் டெலிவிஷன் எந்தக் காலத்தில்தான் வரும் என்று கற்பனையே செய்ய முடியவில்லை, என்னால்! முடிந்தால் நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்!

நகரங்களில் ஏற்பட்டுள்ள கொஞ்ச நஞ்சம் முன்னேற்றம்கூட நாட்டுப்புறங்களில் ஏற்படவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. மின்சார விளக்குகளே காணாத கிராமங்கள் இன்னும் இலட்சக்கணக்கில் உள்ளன என்பதை யாரே மறுக்க முடியும்? போக்கு வரவு வசதிகள் இல்லை; மின்சார வசதிகள் இல்லை; இரயில் பாதைகள் இல்லை என்று அடிக்கடி நாம் கேட்கிறோம். பத்திரிகைகள்கூடக் கிராமங்களுக்குத் தாமதம் ஆகித்தான் வருகின்றன.

என் நண்பர் ஒருவர் அண்மையில் என்னைக் கண்டார்; அவரைப் பார்த்துச் சில நாட்களே ஆகியிருந்தன. அவர் என்னைப் பார்த்ததும் பார்க்காததுமாய், "மேயர் தேர்தலில் யார் வெற்றி பெற்றது?" என்று கேட்டார். அவர் என்னை எதற்காக அந்தக் கேள்வி கேட்டார் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. காலையில் எழுந்ததும், நாளிதழை - அதுவும் புகழ்வாய்ந்த ஓர் ஆங்கில நாளிதழை முழுக்க முழுக்கப் படித்துவிட்டுத் தான் மறுவேலை பார்ப்பவர் அவர். அப்படிப்பட்டவர் என்னைக் கேட்ட கேள்விக்கு நான் என்ன பதில் கூற முடியும்? "என்ன ஐயா! தெரியாதது போல் பாவனை செய்கிறீரா?" என்றேன். "இல்லை இரண்டு நாட்கள் என் சொந்த ஊர் போயிருந்தேன். கிராமப்பக்கம்அல்லவா? பத்திரிகைச் செய்திகளை அறிந்துகொள்ளவில்லை. சாதாரணப் பத்திரிகைகூட அங்கு வருவதில்லை" என்றார். விஷயம் பிறகு தான் புரிந்தது எனக்கு. மேயர் தேர்தலில் வெற்றிபெற்றது யார் என்ற செய்தியைப் பிறகு கூறினேன்.

நகரங்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தில் ஓர் அளவுகூடக் கிராமங்கள் அடையவில்லை. நகரங்கள் அடைந்துள்ள முன்னேற்றமோ, பிறநாடுகள் பல ஆண்டுகளுக்கு முன்னாலிருந்த நிலைமையை நோக்கித் தான் சென்றுள்ளது. அப்படியிருக்க, கிராமங்கள், நகரங்களின் முன்னேற்றத்தை அடைவது எப்போது? நகரங்களை பிறநாட்டுத் தலைநகரங்களைப்போல் முன்னேற்றுவது எப்போது? கிராமங்களை வெகு வேகமாக முன்னேறச் செய்யமுடியாது. ஏனெனில் முன்னேற்றத்திற்கான வசதிகளும் வாய்ப்பும் கிராமங்களில் குறைவு. ஆகவே மெல்ல மெல்ல, கிராமங்களை முன்னேற்ற வேண்டும். அதே சமயத்தில் நகரங்களை வெகு எளிதில் மேலும் முன்னேற்றம் அடையச் செய்யமுடியும். நவீன விஞ்ஞான வசதிகளையும் துரிதமான தபால் தந்தி வசதிகளையும், அழகான கான்க்ரீட் நெடுஞ்சாலைகளையும், சுத்தமான நீண்ட வீதிகளையும், கண்ணைக்கவரும் பூங்காக்களையும், விஞ்ஞான சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ள மிகப்பெரிய சினிமாத் தியேட்டர்களையும் நகரங்களில் வெகு எளிதில் கொண்டு வரமுடியும்; ஆனால் அதே நேரத்தில் நாட்டுப்புறத்துச் சாலைகளில் கப்பிபோட்ட வீதிகளையெல்லாம், தார் போடுவதற்குப் பல துன்பங்கள், கால தாமதம், முதலியன ஆகும். ஆகவே கிராமங்களை மெல்ல, மெல்ல முன்னேற்றுவதற்கு இப்போது முதலே அரசினர் தொடங்கவேண்டும்.

இக்கட்டுரையில் ஜப்பானை உதாரணத்திற்குக் காட்டினேன். எத்தனையோ நாடுகள் ஜப்பானைவிடப் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளன. ஜெர்மனி இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பிறகு, பெரியதொரு வளர்ச்சி பெற்றுள்ளது, பார்த்தவர்கள் பிரமிக்கும் வகையில், சோவியத் ரஷ்யாவின் விஞ்ஞான சாதனைகள் சொல்லும் தரமன்று; அமெரிக்காவின் செல்வ வளத்தைச் சொற்களிலே கூறுவதற்கில்லை. இன்னும் மேலைநாடுகள் பல பிரமிக்கத்தக்க வளர்ச்சி பெற்றுள்ளன. நாம் இன்னும் பின்தங்கிய நிலைமையில்தான் இருக்கிறோம். நாம் தீட்டும் திட்டங்கள் எப்போது நம்மை ஜெர்மனியின் நிலைமைக்கும், ஜப்பானின் நிலைமைக்கும் அழைத்துச் செல்லும் என்பதை அறுதியிட்டுரைக்க முடியாது.

இதனால் நாம் திட்டங்களே தீட்டக் கூடாது இப்படியே இருந்துவிட வேண்டும் என்று யாரும் நினைக்கக் கூடாது. துரிதமான வளர்ச்சியே நம் திட்டங்களின் குறிக்கோளாகஇருக்க வேண்டும் என்பதே என் கருத்து. "மாதம் போம் காத வழி", என்ற குதிரையைப்போல் நம் திட்டங்கள் இருக்கவேண்டாம். கிண்டிரேஸ் குதிரைகளைப் போன்று சீக்கிரத்தில் வெற்றிபெறக் கூடிய, அதனால் மக்கள் உடனடியாக நன்மைபெறக் கூடிய திட்டங்களே நமக்குத் தேவை. நம்முடைய சந்ததியினர் நல்ல முறையில் வாழ்வதற்காக, நாம் பட்டினி கிடந்து சாகாமல், செத்துக் கொண்டிருக்கும் நிலைமையை உண்டாக்கியுள்ள திட்டங்கள் நமக்குத் தேவையில்லை. ஒவ்வொரு கிராமத்தையும். தனித்தனியே முன்னேற்றம் செய்யக்கூடிய திட்டங்கள் நமக்குத் தேவையே தவிர, கோடிக்கணக்கில் கொட்டிக் கொடுத்து, பல்லாண்டுகள் கழித்துப் பலன் தரக்கூடிய திட்டங்கள் தேவையில்லை. திட்டங்கள் தேவையில்லை. திட்டங்களை அடியிலிருந்து ஆரம்பிக்கவேண்டும்; மேலிருந்து ஆரம்பித்தல்கூடாது. அப்படிப்பட்ட திட்டங்களால், அடுத்த சந்ததியினர்தான் பலன் பெறமுடியும்; நாம் பட்டினி கிடந்து சாகத்தான் வேண்டும். அடுத்த தலைமுறைக்குத்தான் நாங்கள் திட்டம் தீட்டுகிறோம், உங்களுக்கல்ல என்று அரசினர் சொல்லிவிடட்டும்! நாம் வாழ, நாமே திட்டம் தீட்டிக்கொள்வோம்! இதைத்தான் முசோரி நமக்கு உணர்த்துகிறது!

-நா. ஜகந்நாதன் எம். ஏ.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
திண்டுக்கல் ரோடு, மதுரை.

# வினா - விடை

## கூடலரசன் பதிலளிக்கிறார்

[கடந்த இரு இதழ்களிலும் 'வினா விடை' இடம் பெறுமைக்கு வருந்துகிறேன்-மன்னிப்பு வேண்டுகிறேன். இந்தக் கிழமை சில கம்யூனிஸ்ட்களின் கருத்துக்கள் கேள்விகளாக் கப்பட்டு பதில் தரப்பட்டுள்ளது. அடுத்த இதழிலிருந்து வழக்கம் போல் நண்பர்களின் வினாக்களுக்கு விடை தரப்படும் சிறந்த வினாக்களை அனுப்புங்கள் - கூடலரசன்.]

★

மாஜினி, சென்னை.

**யார் இந்த அண்ணாக்கள்?**

அறிஞர் அண்ணா அவர்களையும் அவர் தலைமையில் பணியாற்றும் கழகத் தோழர்களைப்பற்றியும் ஆப்பிரிக்க இருண்ட கண்டத்திலிருந்து நேற்றுத்தான் சென்னை வந்தவரைப் போலக் கேட்டிருக்கிறீர்கள். நீங்கள் உண்மையிலேயே தமிழ்நாட்டைப் பற்றியும், தமிழகத்தின் மறுமலர்ச்சிக்காக அறிஞர் அண்ணா அவர்கள் செய்துள்ள தொண்டுகளைப் புரிந்துகொண்டிருந்தால், யார் இந்த அண்ணாக்கள் என்பது தெரிந்திருக்கும். நீங்கள் மதுரைவாசியாக இருந்தபோது சோசலிஸ்ட் சட்டை போட்டு பம்பாய் பிலிட்ஸ் பத்திரிகைச் செய்திகளையெல்லாம் மொழிபெயர்த்துப் புரட்சிப் பத்திரிகை நடத்தினீர்கள். அண்ணா அவர்களும் அவர் தம் அருமைத் தம்பிமார்களும் திராவிட இயக்கத்தில் தொடர்பு கொண்டு மொழி வளர்க்கவும், இனப் பெருமை காக்கவும் சிறைக் கதவுகளை தட்டிக்கொண்டிருந்த நேரத்தில் நீங்கள் தமிழகத்தை நினைக்கவில்லை. காங்கிரஸ் காரர்களைத் திட்டி எழுதுவதே உங்களுடைய தொழிலாக இருந்தது. 'போர் முரசு' என்ற ஏடு உங்களைப்பற்றிச் சொல்லியுள்ள 'பொன் மொழி'களையெல்லாம் நீங்கள் மறந்துவிட்டாலும் என் போன்றோர் மறக்க முடியவில்லை! காங்கிரஸ் எம். எல். ஏ.க்களுக்குப் பின்னணி பாடிய நேரங்களும் இருந்தன. அதனாலே நீங்கள் அண்ணாவின் அரும் பணியை அறிய முடியவில்லை. உங்களுடைய பூர்வோத்திரம்பற்றி ஒரு செய்தி 'தினத்தந்தி'யில் வந்துள்ளது. இந்தியக் கம்யூனிஸ்ட்களுக்கு 'மாஸ்கோக் கூலி' என்று பெயர் சூட்டியது யார் என்ற ஒரு கேள்விக்கு 'மாஜினி' என்ற எழுத்தாளர் என்பதாகப் பதில் தரப்பட்டுள்ளது. ஆனால் இன்றைக்கு நீங்களும் கம்யூனிஸ்ட் என்று பேசுகிறீர்கள். நீங்கள் இப்படி திடீர்க் 'கூலி'யாகிவிட்டதால் அண்ணாவை யார் என்று தெரியாமல் திகைத்துப் பேசுகிறீர்கள்! அவரைப்பற்றி உங்கள் இலக்கிய மேதை ஜீவானந்தம் நன்றாகத் தெரிந்து வைத்துள்ளார். அவரிடமாவது கேட்டுத் தெரிந்துகொள்ளக் கூடாதா?

★

ரெ. ரெங்கசாமி,
ஜனசக்தி ஆபீஸ்.

**திராவிட மாயை பேசும் தி. மு. க. எங்கே செல்கிறது?**

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட இனத்தின் பெருமை பேசி, இலக்கியத்தின் மாண்பு விளக்கி, தனிப் பண்புகளின் காலச் சிறப்புகளைச் சொல்லி, சொந்த நாட்டின் சோபிதங்களைத் தெரிவித்த, வாழ்ந்து வீழ்ந்த பரம்பரையின் தவறுகளை எடுத்துக் காட்டி, உங்களைப்போல் வட நாட்டுக் கங்காணிகளாகி விட்ட நபர்களின் செயலையும் கணக்கிட்டு, திராவிட நாட்டு விடுதலை நோக்கிப் பயணம் செய்துகொண்டுள்ளது. 'ஆரிய மாயை' என்றால் என்ன என்பதையே புரிந்துகொள்ளாதவர்கள் பட்டியலிலே உங்களைப் போன்றோர் இடம் பெறுவதினால் திராவிட இயக்கத்தின் - திராவிடர் கழகத்தின்-திராவிட முன்னேற்றக் கழகத்தின், இலட்சியக் கோட்பாடுகளை நீங்கள் 'திராவிட மாயை' என்கிறீர்கள். இந்தத் தலைப்பில் ஒரு புத்தகம் கூட எழுதியிருப்பதாக நண்பர்கள் சொன்னார்கள். அது இன்னும் சில நாட்களில் பழைய புத்தகக் கடையில் ஒரு அணா விலைக்குக் கிடைக்கும். அப்போது அதிலே உள்ள குற்றச் சாட்டுகளுக்கு விளக்கம் தருவேன். திராவிட இனம் இல்லையென்று சாதிக்க இந்தியக் கம்யூனிஸ்ட்களில் எவரும் இன்றுவரை துணியவில்லை! உங்கள் பி. ராமமூர்த்தி அய்யர் ஒரு முறை சேலம் பொதுக் கூட்டத்தில் ஆரியம் திராவிடம் என்றால் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை என்று பேசினார்! திராவிடப் பண்புகளை நீங்கள் இன்னும் நன்றாக விளங்கிக்கொண்டால்தான் ஆரியமாயை புலப்படும். ஆரியப் பண்புகளை உள்ளடக்கிய செயல்களை நீங்களும் உங்கள் கட்சியும் கண்டிப்பதில்லை. மாயவரம் மாநாட்டுக்குக்கூட அய்யர்கள்தான் உணவு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள்; தீவிரக் கம்யூனிஸ்ட்கள் என்றாலும் பூணூலைக் கழற்றிக்கொள்ளமறந்துவிட்ட பார்ப்பன நண்பர்களை நானறிவேன்! திராவிட இனம், ஆரிய இனம் ஆகியவைகள்பற்றிய சிறந்த நூல்களைப் படித்துப் பாருங்கள். அப்போதாவது உங்கள் குழம்பிய சிந்தனையில் தெளிவு ஏற்படுகிறதா என்பதைக் கவனிப்போம்! ஆனால் 'ஜனசக்தி' வெளியீடுகளை மட்டும் படித்துவிட்டு ஆரியம் இல்லை-திராவிடமில்லை, என்பது எள்ளி நகையாடத்தக்கதாகும்! உங்கள் புத்தகத்திற்கு விமர்சனம் எழுதிய 'ஜனசக்தி' இனப் பிரச்னை சரியாக தெளிவான முறையில் விளக்கப்படவில்லை என்று மதிப்பிட்டுள்ளதையும் உணருங்கள்! 'ஜனசக்தி' உதவி ஆசிரியர் எழுதிய புத்தகத்தை 'ஜனசக்தி'ப் பத்திரிகையே பாராட்ட மறுக்கிறது. தெளிவு வேண்டும் என்கிறது. 'தினத்தந்தி' சொன்னதுபோல மாஸ்கோவை நோக்கி வேகமாகப் போய்க்கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட்கள் தி. மு. க. எங்கே செல்கிறது என்று கேட்பது வேடிக்கையாகவே இருக்கிறது! எதையாவது எழுதி வைப்போம் என்ற அல்ப ஆசைதானே தவிர உங்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சியில் உண்மையான பற்றில்லை; நம்பிக்கையில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் இதனைப் பல கம்யூனிஸ்ட்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்! என்னுடைய சவாலை நீங்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் 'ஜனசக்தி' உதவி ஆசிரியர் பதவியை விட்டு விலகிக் கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேரத் தொண்டனாக தமிழகமெங்கும் சுற்றி வாருங்கள்! அந்தச் சுற்றுப் பயணத்திலே கேளுங்கள் யார் இந்த அண்ணாக்கள், திராவிட மாயை பேசும் தி. மு. க. எங்கே செல்கிறது என்றெல்லாம்! அப்போதுதான் உங்கள் கட்சிப் பற்றையும் இலட்சிய நோக்கத்தையும் கணக்கிடமுடியும். இதற்கு மாறாக சமூகத்தைப்பற்றி வீசுகின்ற இழி சொற்கள் எல்லாம் உங்களுடைய "பிழைக்கும் வழி" என்றுதான் புலப்படுகின்றன?

★

ப. ஜீவானந்தம், சென்னை.

**வடக்கு தெற்கு வாதிகளே! மாயவரம் மாநாட்டுக்கு வருவீர்களா? நிலைமையைப் புரிந்து கொள்வீர்களா?**

மதிப்பிற்குரிய இலக்கிய மேதை அவர்களே! திராவிட முன்னேற்றக் கழகத்தவருக்கு விடுத்த இந்த அழைப்பை 'ஜனசக்தி'யில் கண்டேன். கேள்வியின் உட்பொருள் வடக்கு - தெற்கு என்று பேசுவது தவறென்ற உங்கள் பெருங்குரலின் கருத்தாகவே இருக்கிறது. வஞ்சிக்கும் வடநாட்டையும், வதைபடும் தென்னாட்டையும் ஆதாரப் பூர்வமாக அறிந்துள்ள நாங்கள் மாயவரம் மாநாட்டிலே வந்து தெரிந்துகொள்ளவேண்டிய நிலையிலே இல்லை. மாயவரம் விவசாயிகள் மாநாட்டை நீங்கள் நாடக சாலையாக்கி உங்கள் வழக்கத்திற்கு மாறாக நாட்டியத்திலிருந்து வில்லடிப் பாட்டு வரை நீடித்துவிட்டீர்கள். இரண்டாவது பொதுத்தேர்தல் முடிந்தவுடன் தமிழ்நாட்டில் உங்கள் கட்சியின் சரிவிற்கு வருத்தப்பட்ட 'குமுதம்' என்ற ஏடு கம்யூனிஸ்ட்கள் கலைத்துறையிலே கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டது. அதன்படியே செயல்பட்டு வருகிறீர்கள்! ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியிலே சொந்தச் சரக்குகள் இல்லாததால் இரவல் சரக்குகளையும் "விலாசமில்லாதவைக"ளையும் நீங்கள் விரும்பி விரும்பி வரவழைக்க நேரிட்டுள்ளது! வடக்கும் தெற்கும் ஒன்றே என்பதற்கு நீங்கள் சொன்ன காரணம் அவ்வளவு பொருத்தமாக இல்லை! கழகம் வடநாட்டு எளியோரை மறந்துவிட்டு வடநாடு வாழ்கிறது என்று, என்றும் கணக்கிடவில்லை! முக்கியமான திட்டங்களிலும், அரசியல் உரிமைகளிலும், மொழி ஆதிக்கத்திலும் தென்னகத்தை வடநாட்டு ஆதிக்கவெறியர்கள் தாழ்த்துகிறார்கள் என்ற உண்மையை அடிப்படையாக வைத்துக் கழகம் பணியாற்றுகிறது. குப்பனும் சுப்பனும் அங்கும் இங்கும் அல்லல்படுகிறார்கள் என்பதை உங்களைக் காட்டிலும் சிறப்பாகவே உணர்ந்திருக்கிறோம். ஐந்தாண்டுத் திட்டங்களில் போதுமான பங்கீடில்லை நமக்கு என்ற கழகக்குற்றச்சாட்டை காங்கிரஸ்காரர்களும் ஒத்துக்கொண்டுள்ளார்கள். ஆனால் கம்யூனிஸ்ட்களாகிய நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும் இன்று வரையும் எதுவும் பேசவில்லை. பேசினாலும் கேரளத்திற்கு மட்டும் மத்திய சர்க்கார்கள் பாரபட்சம் எனப் புலம்புகிறீர்கள்? மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் மதுரையில் ஒரு சிறப்புக் கூட்டத்தில் பேசினார். அவர் பேசிய இடத்திற்கு எதிரே "ஐந்தாண்டுத் திட்டங்களின் அபூர்வ சாதனைகள்" என்ற பெரிய தட்டி விளம்பரத்தை எழுதிவைத்தார்கள். பவானிசாகரையும் குந்தாவையும் ரயில்பெட்டித் தொழிற்சாலையையும் காட்டி உங்களின் கம்யூனிஸ்ட் சீடர்கள் மத்திய சர்க்காரின் சாதனைகளைக் கணக்கிட்டார்கள். இத்தகைய செயல்கள் வடக்கு—தெற்கு வாதத்தை மறுத்துவிட்டதாகாது! வடநாட்டு ஆதிக்க நிலவரத்தை அரசியலிலும், உங்கள் கட்சியிலும் கூட உள்ள ஆதிக்க வெறியை நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம். நீங்கள்தான் இன்னும் இருண்ட வீட்டிலே இருக்கிறீர்கள். தலையைப் புதுடில்லியிலே அடகுவைத்திருக்கிறீர்கள் மீட்கத் தெரியாமல். கண்ணீர் விடவேண்டிய நீங்கள் எங்களைக் கேலி செய்கிறீர்கள். சிந்தித்துப் பாருங்கள்!

★

என். சங்கரய்யா, மதுரை.

**'டாங்கே எங்கே?' என்று கேட்பதுதான் தி. மு. கவின் திட்டமா?**

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் கமிட்டியின் உறுப்பினராகிய தாங்கள், பி. ஏ. பட்டம் பெற்ற தாங்கள், இப்படியொரு கேள்வியைக் கேட்பது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி அதன் அரசியல் சமூகப் பொருளாதாரக் கொள்கைகள் பற்றி எந்த அளவுக்குக் குறைந்த நிலையில் தெரிந்துள்ளீர்கள் என்பதையே எடுத்துக்காட்டுகிறது. கழகத்தின் கொள்கைகளைப் புரிந்துகொள்ளாமல் எதையாவது பொதுக்கூட்டத்தில் புலம்பிவைத்துப் பேசுவது கம்யூனிஸ்ட்களுக்கு வழக்கம் என்று பொதுமக்களும், அரசியல் நெறி கற்றோரும் மதிப்பிடுவதைத்தான் உங்கள் கேள்வி உறுதிப்படுத்துகிறது! முன்னேற்றக் கழகத்தின் திட்டங்களைத் தெரிந்துள்ள கம்யூனிஸ்ட்களும் சிலர் இருக்கிறார்கள் அவர்களுக்குள்ள அச்சம் என்றைக்காவது ஒருநாள் திராவிட நாட்டுத்திட்டம் மக்களின் இதயப்பூர்வமான ஆதரவுடன் வெற்றி பெறப்போகிறது. நம் கட்சியும் கல்லறைக்குச் செல்லக் காத்திருக்கிறது என்பதுதான். கட்சியின் ஆலோசகர் எனக் கருதப்படும் நீங்கள் டாங்கே எங்கே என்று கேட்பதுதான் திட்டமா என்கிறீர்கள். இல்லை தோழரே இல்லை! டாங்கே விவகாரம் சாதாரணப் பிரச்னையாக உருவாகி சில சந்தேகப்பட்ட மதுரைக் கம்யூனிஸ்ட்களால் பெரிதாக்கப்பட்டதாகும்! தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருக்கும் கம்யூனிஸ்ட்கள் உங்களைப் போன்ற நான்காம்ரகத்தலைவர்களிடத்திலும், ராமமூர்த்தி போன்றவர்களிடத்திலும் விளக்கம் கேட்ட காரணத்தினால், ஜனசக்தி ஆசிரியர்களுக்கு உள்ளம் துடித்துக் கோபம் வந்த காரணத்தால் டாங்கே விவகாரம் தமிழகத்தில் ஒரு சலசலப்பை உண்டாக்கிக் கம்யூனிஸ்ட்களின் வேடத்தைக் கலைத்தது. நீங்கள்கூட மதுரை திலகர்திடலில் நகரசபைத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில மனம் துடித்து இதே கேள்வியைக் கேட்கவில்லையா? தி. மு. கவின் திட்டமா என்று கேட்பதைவிட டாங்கே எங்கே? என்ற கேள்விக்கு, எழுந்துள்ள சிக்கல்களுக்கு, நீங்களாவது பதில் கூறினால் நாங்கள் வரவேற்போம். என்ன சொல்கிறீர்கள்?

—2 ம் பக்கத் தொடர்ச்சி—

எழுதிமுடித்து முகவரி எழுதும் போது நாயுடு'' ''முதலியார்'' என மறந்தும் சேர்த்து எழுதிவிட்டால். முகவரி எழுதிய இளைஞனைப் பார்த்து ''என்ன அய்யா இது. கொஞ்சமாகிலும் அறிவிருக்கா? ஏன் தமிழ் இனத்தைச் சிதைத்துக் கூறுபோடுகிறாய்?'' என வெகுண்டு பின்னர் விளக்கி 'இனி அப்படிச் செய்யாதே' என்று திருத்திய அந்த வாய், அந்தோ! மூடப்பட்டுவிட்டதே!

''அம்மா! பெண்கள் மாநாடு கூட்டி, திராவிடத் தந்தை ஈ. வே. ரா. அவர்களுக்கு ''பெரியார்'' என்று பட்டம் சூட்டி மகிழ்ந்தாய். அந்தப் பெரியார் இருக்கிறார். அம்மா நீ மட்டும் போய்விட்டாயே! நீ கொடுத்த பட்டத்தை மட்டும் போற்றி வைத்துக்கொண்டு உன்னை ஏன் அம்மா அப்பெரியார் பார்க்க வரவில்லை?

கடந்த எம். எல். ஏ. தேர்தலில் கழக வீரர் என். வி. நடராஜனுக்காக படுக்கையிலிருந்து எழுந்து, இருமருங்கிலும் இருவர் பிடித்து வண்டியில் அழைத்துவர, தலைமை வகித்துப் பேசிய அந்த உணர்ச்சி மிகுந்த, உள்ளக்கிளர்ச்சி அனைய அப்பேச்சுக்கள் இன்றும் திராவிட இளைஞர் காதுகளில் ஒலித்த வண்ணம் இருக்கின்றனவே. அந்தோ மறக்குலத் தாயே! நீ மட்டும் மறைந்துவிட்டாயே! அறிஞர் அண்ணாவின் எம். எல் ஏ. வெற்றி கண்டு படுக்கையில் இருந்துகொண்டே இனிப்புப் பண்டங்களை வரவழைத்து இரண்டு நாள் வரை வழங்கிக்கொண்டிருந்த அந்தச் சோழநாட்டுக் கையை மீண்டும் எப்பொழுது காண்பேன்?


அண்மையில் நடந்த நகராண்மைக் கழகத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியைக் கண்டு, அளவிலா மகிழ்ச்சி கொண்டு இன்பம் அடைந்த அந்த முகம் வாடிவிட்டதே! ''நரம்புத்தளர்ச்சியால் என் கால்கள் கட்டப்பட்டு இல்லாவிட்டால், நான் தினம் பத்துக் கூட்டங்களில் பேசியும், எல்லா பேட்டைகளில் இருக்கும் எனது தோழர்களின் செல்வாக்கைக் கொண்டும் 80 இடங்களை, கட்டாயம் பெற்றிருப்பேன்'' என்று படுக்கையில் முழக்கமிட்டு, உடனே வலி பொறுக்கமாட்டாமல் இருதயத்தைத் தாங்கிப் பிடித்துக்கொண்டீர்களே! தங்கத் தமிழ்த்தாயே! வண்மை மிக்க உமது உளவாற்றல் மறைந்துவிட்டதே. அந்தோ இந்த இழப்பினை எனது முன்னேற்றக் கழகத்திற்கு எப்படி ஈடுசெய்வது?

வீராங்கனையே! அடிக்கடி எல்லோருக்கும் நீ கூறும் தாரக மந்திரம்! அந்த அருமை மறைமொழியை, அம்மா, நாங்கள் மறக்கவில்லை.


''தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை
நன்று''

என்ற குறளும்,

''ஒன்றே செய்யவும்
வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும்
வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும்
வேண்டும்; இன்னும்
'நாளை' 'நாளை'
என்பீராகில்
.............................''



21—5—59-ல் அம்மையாரின் கடைசிப் பயண ஊர்வலம் சென்னை தங்கசாலை வழியாகச் சென்ற காட்சி.



நன்காட்டில் பேராசிரியர் மயிலை. சிவமுத்து தலைமையில் கழகக் காவலர் நம் நாவலர் மனம் உருக இரங்கல் உரை நிகழ்த்துகிறார். அருகில் X குறி அடையாளமிடப்பட்டவர் தான் சிறுவை. மோகனசுந்தரன். அம்மையார் 3 ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டு இருந்தபோது - கழகப் பாடல்களையும்-எழுத்துக்களையும் - அறிஞர் அண்ணாவின் தலையங்கங்கள், எழுத்தோவியங்கள் முதலியவற்றையும் அருகிருந்து படித்துக் காட்டியவர்.

## டாக்டர் தருமாம்பாளைப்பற்றி தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

''................,தருமாம்பாள் மக்களின் உடல் நோய் தீர்க்கும் மருத்துவராக மட்டும் மருவவில்லை என்றும், சமூக நோய் தீர்க்கும் மருத்துவராகவும் மருவுகிறார் என்றும் எண்ணச் செய்தது.

தருமாம்பாள் நிலையத்துக்கு உடல் நோயர்மட்டும் போதருகிறாரில்லை; மற்ற நோயரும் போதருகிறார். ஏழை மாணாக்கர், திக்கற்றவர், ஒதுக்கப்பட்டவர், வேலையில்லாதார் முதலியோர் போதருகின்றனர். அவரவர் வேண்டுதலைத் தெரிந்து அவரவர்க்குத் தக்க நலம் புரியச் சகோதரியார் அங்கும் இங்கும் அலைவதை என் கண்கள் ஒரு முறையா கண்டன? பல முறை கண்டன...

சாதி மத வேற்றுமை என்னும் நோய் தீர்க்கும் மருந்து கலப்பு மணம் என்னும் முடிவுக்கு வந்தவருள் யானும் ஒருவன். மருத்துவர் தருமாம்பாள் முயற்சியால் கலப்பு மணங்கள் நிகழ்ந்து வருதலைச் சென்னை அறியும். சில மணங்கள் என் தலைமையிலும் நடைபெற்றன..............''

திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்—பக்: 796.

[தொகுத்தவர்: **சிறுவை. அனசூயா மோகனசுந்தரம்**]

என்ற கபிலர் மொழியையும் கூறி. ''இதற்கு இலக்காணவன் எங்கள் அண்ணாதான். எங்கே மேலே படி! பார்த்தாயா இந்த வாக்கியத்தை அண்ணா தவிர வேறு எவராலும் சொல்லமுடியாது. என்ன சொல்கிறாய்?'' என்று அண்ணாவின் எழுத்தோவியங்களை படுக்கையிலிருந்தே சுவைப்பாயே! அங்ஙனம் சுவைக்கும்போது உங்கள் நரம்புத்தளர்ச்சி நோய்கூடச் சிறிது ஆறுதல் பெறுமே அம்மா நீ ஏன் மறைந்தாய்?

தமிழ் மூதாட்டியே! தமிழ் வீரப் பெண்மணியே! கலப்புமண சன்மார்க்கத் தொண்டரே! டாக்டர் தருமாம்பாளே! நீ இறக்கவில்லை. இறக்கவே இல்லை. அதோ இருக்கிறாய். உன் உருவம் ஆயிரம் ஆயிரம் இளைஞர், தாய்மார், பெரியோர், பட்டதாரிகள், பேராசிரியர்கள், சீமான்கள், அரசியல் தலைவர்கள், அரசியல் சான்றோர், கவிஞர்கள் துறவிகள், ஏழை எளியோர் ஆகிய எல்லோர் உள்ளங்களிலும் பதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த தலைமுறை வரை உனது உருவத்தை இல்லை என்று சொல்ல முடியாது இருக்கிறார்கள் அதோ! இதோ! என்று தான் சொல்கிறது உலகம்.


தாயே நீ, தலைமை தாங்கிய தாய்மார் கழகம், வளர்த்த மாணவர் மன்றம், மகளிர் மன்றம், தென்னிந்திய பிரம்ம சமாஜம், சர். தியாகராயர் கல்லூரி, சென்னை நக்கீரர் கழகம், தமிழ்இசைச் சங்கம் எல்லாம் இருக்கின்றன. இத்தனைக்கும் மேலாக உச்சாணியாக நீ போற்றிப் புகழ்ந்து கட்டிக்காத்த திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. கழகத்தின் காவலர், கலங்கரை விளக்கம், அரசியல் விஞ்ஞானி, அறிஞர் அண்ணாவின் உள்ளத்திலே அக்கழகப் படைவீரர் அனைவர் உள்ளங்களிலும் நீ இருக்கிறாய்.


ஆகவே திருவிடமே! திருவிடத்தின் தனி அரசி, மங்கையர் தம் திருவிளக்கு அணையவில்லை; இறக்கவில்லை; சுட்டு எரிக்கவில்லை. அந்தோ! ஆயிரம் ஆயிரம் உள்ளங்களில் கொலுவீற்று இருக்கிறார்கள். இறக்கவில்லை. இருக்கிறார்கள்.

ஆகவே அத்தாயின் உணர்வைக் கொடியாய்ப் பிடித்து, மடிதட்டி முந்துற்று, தழும்புகள் ஏந்தி. ''அம்மா! நீ காணவேண்டும் என்று நினைத்த திராவிட நாடு இதோ'' என்று அவர்கள் உயிர் அமைதிபெற, காணிக்கையாக அளிக்க முந்துவோமாக. அதோடு நிற்கப்போவதில்லை: உனது பெயரால் ஒரு நிலையான நினைவுச்சின்னம். அதுவும் அது ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக விளங்கும், அங்கே. அப்பள்ளியிலே ''அண்ணா சொற்பொழிவு மண்டபம்'' என ஒன்று அமைத்து அதனை ஒரு வரலாற்றுச் சின்னமாக்குவோம். இது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.

-சிறுவை
அனசூயா மோகனசுந்தரம்,
மகளிர் மன்றம், சென்னை.

# தென்காசியில் திராவிடர் படை!







கடந்த 16, 17 தேதிகளில் தென்காசி நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது. உரிமை முழங்கும் மத வேழங்களின் முழவொலி குற்றாலக் குன்றுகளில் எதிரொலித்தது. விடுதலைப் பண்பாடுவோரின் வீர அணிவகுப்பு அங்கு நடைபெற்றது. ஆம்! அந்த இரு நாட்களும் தென்னகத்தின் விடுதலைப் பாசறையினர், அங்குப் பாடி வீடமைத்து எதிர்காலத்திற்கான திட்டங்களை வகுத்தனர். குறிப்பாக நெல்லை மாவட்டத்தின் துயர் களையும் பல பிரச்னைகள் பற்றியும் முடிவுகளெடுக்கப்பட்டன. மேலே மாநாட்டைத் திறந்து வைத்துத் தோழியர் பொற்செல்வி இளமுருகு பேசுவதையும் துணைப் பொதுச் செயலாளர் தலைமை உரை நிகழ்த்துவதையும், தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்துவதையும் காண்க. கீழே துணைப் பொதுச் செயலாளருடன் மாநாட்டு வரவேற்புக் குழுவினர் உட்கார்ந்திருப்பதையும் காண்க. பிற படங்கள் உள் பக்கங்களில் உள்ளன.



ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.